தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௰௬ விசுவாவசு, ஆனி. 1965 மே, ஜூன்.	மலர்
௪௧		௩.

"பண்டைத் தமிழரின் கட்டிடக் கலை."

T. V. சிவசண்முகம், பி. ஏ., தேவனாம்பட்டு.

"புத்தம் புதிய கலைகளும், பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்களைக் கூறும் மேன்மைக் கலைகளைத் தமிழர் அறிந்திலரென்றும், அவற்றைச் சொல்லவும் கூடுவதில்லை. நம தமிழ்மொழிக்கு" என்று பேதை மக்கள் இன்று கருதுகின்றனர். அவை மேலை நாடுகளில் தான் மெத்த வளர்வதாகவும், தமிழனுக்கு அவற்றைப்பற்றிய அறிவு கிடையாது என்றும் இற்றைப்போழ்து ஒரு சிலர் கருதும் மொழி ஏற்புடையதோ!

பத்து நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தக் கடல் கோள்களுக்கு முந்திய ஆதிகாலத்திலேயே தமிழர்கள் ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்ந்து சிறந்திருந்தனர். மெய்யுடையொருவன் சொலமாட்டாமையால் அஃது பொய்யெனப் படுதலொப்பவே தமிழர் தம் கலையறிவை பிறர் அறியமாட்டாததால் அவர்களுக்கு அவ்வறிவே இல்லையென முடிவெடுத்தல் எங்ஙனம் பொருந்தும்?

கலை.

ஒவ்வொரு நாட்டின் கலையும் அந்நாட்டின் சமூக, பொருளாதார நிலையினைப் பொருத்தே அமைதல் கூடும். இந்நிலையில் மேன் மக்களாய்த் திகழ்ந்த பண்டைத் தமிழரின் கலைப்பெருக்கம் ஒவ்வொரு துறையிலும் சிறந்தது. உண்ணும் உணவிற்கும்; உடுக்கும் உடைக்கும் அடுத்ததாகத் தேவைப்படுவது இருக்க இடமாகும். பருவங்கள்தோறும் ஏற்படும் மாறுதல்களிலிருந்துத் தப்பவும், பாதுகாப்புத் தேடவும் கட்டிடங்கள் தேவைப்படுகின்றன. கட்டிடங்கள் சிறைந்த முறையிலமைத்தல் அரியதொரு கலை. இக் கலையில் இன்று நாம் சிறந்து விளங்குகின்றோம். இதற்கெனத் தனித்துறையும், பட்டப் படிப்பும் இன்றுண்டு. பண்டைத் தமிழரின் கட்டிடக் கலைபற்றிய ஆற்றலை ஈண்டு காண்பாம்.

கட்டிடக் கலையின் தொன்மை.

இன்றைக்குப் பத்து நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே 'இலெமூரியர்' கண்டத்தில் வாழ்ந்திருந்தத் தமிழர் கட்டிடக் கலையில் சிறந்து விளங்கினர். கட்டிட அமைப்பிலும், வேலைப்பாட்டிலும் 'இலெமூரியா' மக்கள் தற்கால மக்களைவிட மிகவும் முற்போந்தவர்கள் என்பது தெளிந்ததொரு முடிவு. அவர்கள் கட்டிட அமைப்புத் திட்டங்கள் மற்ற எல்லோருடைய திட்டங்களையும்விடக் கால எல்லையினைக் கடந்து என்றும் நிலவத்தக்க நிரந்தரத் தன்மை பெற்றவை.

இயற்கையின் சீற்றத்தினால் கட்டிடங்கள் சேதமுறுவண்ணம் அமைக்கும் திறத்திலும் பண்டைத் தமிழர்கள் சிறந்திருந்தனர். தமிழகத்தின் தென்பகுதி பன்முறை நில அதிர்ச்சிகளுக்கும். பெயர்ச்சிகளுக்கும் ஆளாவது வழக்கம். தமிழர்தம் நடைமுறை அறிவாலும், அறிவியல் நுட்பத்தாலும், உள இயல் ஆராய்ச்சியின் மேம்பாட்டினாலும், இயற்கையின் சீற்றங்களையெல்லாம் வென்று அவர்களின் கட்டிடங்கள் சில இன்றளவும் அழியாது நிலவி வருகின்றன.

இக்கட்டிடங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட கற்கள் மிகவும் உறுதிவாய்ந்தவை. கருங்கல், சலவைக்கல் ஆகியவற்றையும்விட கடுமையும் உறுதியும் வாய்ந்தவை.

வானுயர்ந்தக் கட்டிடங்கள் அமைக்கும்போது நடுநிலையொப்பு (Centre of gravity) ஒரு மயிரிழையேனும் பிறழாது வெகு நுட்பமாக அமைத்திருக்கும் ஆற்றலை எண்ணி எண்ணி வியத்தற்குரியது.

வீடுகளை அவர்கள் நெருக்கிக் கட்டவில்லை. இடைவெளியிட்டு உடல் நலத்திற்கு ஒத்தமுறையில் பெரியவையாகவும் காற்றோட்டமுள்ளவையாகவும் அமைத்தனர். வீதிகள் அகன்றும் நீண்டும் வரிசையாக அமைந்தன. தலைமைப் பாதைகளை ஆங்காங்கே அமைத்தனர். இக்காலத்தே விளங்கும் 'சிமண்டுப்' பாதைகளைப் போன்று உறுதிவாய்ந்த பாதைகள் அவை. முதலில் செடி கொடிகளை வெட்டி, நிலத்தைச் செம்மைப்படுத்தி ஈரமாக்கி அதன்மீது சீமைச் சுண்ணாம்பு போன்ற வெண்ணிற கற்பொடியைத் தூவினர். அது காய்ந்த பின்னர் 'சிமண்டினைப்' போன்ற உறுதிவாய்ந்த பாதையாக விளங்கியது. ஒன்றுக்கு மேற்பட்ட வீதிகள் கூடுமிடங்களை 'சந்திகள்' என அழைத்தனர். வீதிகளில் நீர் தேங்காது ஓடவும், கழுநீர் தரைக்கடியில் ஓடவும் வசதிகள் செய்யப்பட்டன.

போக்குவரத்திற்குத் தடை ஏற்படாதிருக்கும்பொருட்டு வீதியின் கோடியில் கட்டப்பட்ட சுவர்களை வளைந்த சுவர்களுடையனவாயிருக்குமாறு கட்டினர். ஒவ்வொரு வீட்டிலும் அகன்ற கூடங்

களும், பல அறைகளும் அமைந்திருந்தன. வாயிலின் முன்பு வழிப்போக்கர்கள் தங்கிக் களைப்பாறும்பொருட்டு உயர்ந்த திண்ணைகளையும் திண்டுகளையும அமைத்தனர். பல அடுக்கு மாளிகைகள் கட்டப்பட்டன. பெண்கள் பந்தாடிக் களிப்புற ஒவ்வொரு வீட்டு மாடியிலும் அகன்ற விளையாட்டுத் திடலுமிருந்தது. காற்றோட்டம், ஒளி ஆகியவை கருத்தில்கொண்டு காற்றும் ஒளியும் புகும்படியாகச் சாளரங்கள் அமைத்தனர். வீட்டை அமைத்தலும், அதனை அலங்கரித்தலும் கலைகளாகவே கொள்ளப்பட்டன.

உயரமானச் சுவர் எழுப்பி கல்லாலும் மண்ணாலும் மரத்தாலும் அமைக்கும் வீடுகளேயன்றி பாறைகளையும், மலைகளையும் குடைந்து செதுக்கிய அரிய வேலைப்பாடுடைய கட்டிடங்களையும் செய்துமுடித்தனர். தமிழரின் கட்டிடக் கலை அவர்களின் சமய நிலையினை யொட்டியே எழுந்தது.

தமிழகத்தில் முதன் முதலில் கற்கோயில்களை அமைத்த பெருமை பல்லவ மன்னர்களையே சாரும். திருச்சிராப்பள்ளி சிற்றன்னவாசல் ஆகிய இடங்களில் மன்னர் மகேந்திரர் குகைக் கோயில்களை அமைத்தார். அவர் மகனுர் நரசிம்மர் மகாபலிபுரத்தில் அழகானச் சிற்பங்களைச் செதுக்கவைத்தார். இவையனைத்தும் கட்டிடக் கலையின் முதிர்ச்சியேயாகும் தென்னகத்துக் கோயில் கட்டிடக் கலையின் வளர்ச்சியில் மகாபலிபுரத்துச் சிற்பங்கள் இரண்டாவது கட்டித்தைக் குறிக்கிறது. பாறைகளைக் குடைந்தெடுக்கும் முறை கைவிடப்பட்டுக் கற்கோயில்கள் கட்டப்பட்டன. இதனைப் பின்பற்றி வட இந்தியாவிலும் கோயில்கள் கட்டப்பட்டன.

இராசசிம்மப் பல்லவர் எழுப்பிய மகாபலிபுரத்துக் கடற்கரைக் கோயிலும் அதையடுத்துப் பின்னர் எழுந்த காஞ்சி கைலாசநாதர் கோவிலும் கட்டிடக் கலையின் பண்டைத் தமிழரின் வளர்ச்சியினை என்றென்றும் பறைசாற்றிக்கொண்டிருக்கும். கைலாசநாதர் கோயிலின் நீளம் 280 அடி. அகலம் 160 அடி. விமானத்தின் உயரம் தரைமட்டத்திலிருந்து 160 அடி. அவ்வளவு பெரிய கோயிலைக் குடைந்தெடுத்திருக்கின்றனர். பல்வேறு பகுதிகளை ஒன்றோடொன்று கலைச்சிறப்போடு செதுக்கவும், ஆங்காங்கே அமைக்கவேண்டிய சிற்பங்களைச் செதுக்கவும் அதிகத் திறமை தேவை.

சோழர்கள் காலத்திலும் கட்டிடக்கலை பெரிதும் வளர்ச்சியடைந்தது. கி பி. 11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட தஞ்சை பிருகதீசுவரர் ஆலயத்தின் நீளம் 500 அடி; அகலம் 250 அடி; கோபுரம் அமைந்துள்ள மேடையின் உயரம் 82 அடி. மேடையின் உச்சியிலிருந்து கோபுரத்தின் உயரம் 200 அடி. கோபுரம் மேலே செல்லச் செல்லப் பரப்பில் ஒன்றுக்கொன்று குறைவான மூன்று அடுக்குகளை

புடையது. கோபுரத்தின் சிகரம் பெரியது. இராசேந்திர சோழன் அமைத்த கங்கைகொண்ட சோழபுரமும், ஆங்குள்ள ஆலயமும் கட்டிடக் கலையில் சிறந்தவை.

பாண்டிய மன்னர்களும் கட்டிடக் கலையினை வளர்த்தனர்; உயர்ந்த பல மாட மாளிகைகளைக் கொண்டது மதுரைமா நகரம். மதுரை மீனாட்சியம்மை ஆலயத்தின் எழிலினை விளக்கத் தேவையு முண்டோ! மூவேந்தர் ஆட்சிக்குப் பிறகு வந்த விசயநகர அரசர்களும் கட்டிடக் கலையினை வளர்த்தனர்,

மதுரை மீனாட்சியம்மை ஆலயத்தைச்சேர்ந்த புது மண்டபம் வசந்த விழா நடைபெறும் இடம். அதில் கருங்கல்லினால் அமைந்த நூற்று இருபத்துநான்குத் தூண்கள் உள. அவற்றில் அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அம்மண்டபத்தை மட்டும் கட்டி முடிக்க இருபத்துமூன்று ஆண்டுகள் ஆகியதாம். நூறுயிரம் பொன் செலவாயிற்றும். மதுரை திருமலை நாயக்கர் மகாலில் மிகவும் சிறந்தக் கட்டிடம் அந்தக் கட்டிடத்தில் மரமே பயன்படுத்தப்பட வில்லை. செங்கல்லும் சுண்ணும்புமே பயன்படுத்தப்பட்டன. அங்குள்ள தூண்கள் நாற்பதடி உயரமும், பதினைந்தடிச் சுற்றளவும் கொண்டவை.

பண்டைத் தமிழர்கள் நகரமைப்புக் கலையில் சிறந்தவர்கள் ஊருக்குப் பொதுவான மன்றங்களும், சதுக்கங்களும் ஆங்காங்கே அமைக்கப்பெற்றன. வீடுகள், கோயில்கள், பயிர்ப்பண்ணைகள், தொழில் நிலையங்கள் இவை வேறுவேறு தனியிடங்களில் கட்டப்பட்டன. அரசன் மாளிகை நகர மத்தியில் அமைக்கப்பட்டது.

இரவிலும் பகலிலும் வாணிகம் நடைபெற அங்காடிகளை அமைத்தனர். கப்பல் தங்கும துறைமுகத்தை நிர்மாணித்தனர். நகரத்தைச் சுற்றி உயர்ந்த மதிற்சுவர்களை எழுப்பினர். அம்மதிற்சுவர்கள் மீது பகைவரைக் கொல்லும் இயந்திரப் பொறிகளையமைத்தனர். மதிலைச் சுற்றி ஆழ்ந்த அகழிகளை வெட்டினர். பலவகை அரண்கள் அமைத்து நகரத்தைப் பகைவரிடமிருந்து காத்தனர்.

நீரைத் தேக்கி விவசாயத்திற்குப் பயன்படுத்த ஏரிகளை அமைத்தனர்; கால்வாய்களை வெட்டினர்; ஆற்றின் கரைகளை உயர்த்தினர்; பெருகிவரும் ஆற்றின் நீரைத்தடுக்கக் குறுக்கே அணை கட்டினர். காவிரி நதியின் குறுக்கே கரிகால்வளவனால் கட்டப்பட்ட அணை இன்றும் நின்றிலங்குகின்றதல்லவா!

கட்டிடக்கலையின் ஒவ்வொரு அங்கத்தினையும், அறிந்து அவற்றில் ஆற்றல்பெற்று பிற நாட்டினரைவிட சிறந்தவர் தமிழரே என்பதறிந்து மகிழ்தற்குரியது.

(முன் தொடர்ச்சி)

"புகார் முதல் வஞ்சி வரை"

பேராசிரியர், சி. கோவிந்தராசனார்.

நீரணிமாடத்து நெடுந்துறை :

கண்ணகி கோவலன் கவுந்தியடிகள் ஆகிய மூவரும் அரங்கத்தினின்றும் நீரணிமாடத்து நெடுந்துறை போகி, நியமத்தென்கரை எய்தினர். ஈண்டு ஆற்றைக் கடக்க அமைந்ததாக இளங்கோவடிகள் கூறும் நீரணிமாடம என்பது என்ன என்பதை உரையாசிரியர் கருத்துடன் சிந்தித்தறிவது சிறப்புடையதாகும்.

புகாரிலிருந்து காவிரியின் வடகரையே மேற்கு நோக்கித் தொடரும் வழியின் எல்லை அரங்கமேயாகும். இங்கிருந்தும் தெற்கு நோக்கிய திருப்பமாக இடையேயுள்ள காவிரியாற்றைக் கடக்கின் அங்குள்ள உறையூரிலிருந்து மதுரைக்குச்செல்லும் நெடுவழி தொடருகின்றது. சங்ககாலச் சோழராட்சியில் உறையூர எல்லாவளமும் பெற்ற தலைமைப் பேரூராக நின்றது. அரண்வகைகளால் பாதுகாக்கப்பட்ட மாடமாளிகைகளும் அங்காடி வீதிகளும் பிற அரசசெல்வங்களும் நகருக்குரிய அங்கங்களாக இருந்தன. இத்தகைய உறையூர்க்கு, சோழராட்சியின் செல்வப் பெருக்கிற்கு இடமாகவும் கடற்கரைப் பட்டினமாகவும் அமைந்த காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து நெடிதாகத் தொடர்ந்திருந்த வழிகளுள், சிலப்பதிகாரம் கண்டுள்ள காவிரியின் வடகரைவழி. அரங்கமளவிலும் நெடிதாகத் தொடர்ந்ததாயினும காவிரியைக் கடக்கவேண்டிய நிலையில் அறுதியிட்டு நின்றுளது. மற்றும் இப்பகுதியில் காவிரியின் ஒருகரையில் சோழநாட்டுப் பெருநகர் உறையூர் நிற்க, மறுகரையாகும் அரங்கப் பகுதியில் சிறந்த தெய்வத் தலங்களாகும் திருவரங்கமும் ஆனைக்காவும் அமைந்திருந்தன. இந்நிலையில் ஆறு இடையிட்டு நீர் நிறைந்த காலத்தில் வழித் தொடர்பில்லாமல் நின்ற குறையை அக்கால சோழராட்சியில் நீரணிமாடத்து நெடுந்துறையாக்கி, மக்கள் போக்குவரவிற்கு எளிதாக்கியதுடன், நெடுஞ்சாலையின் தொடர்பினையும் இணைத்திருக்கின்றார்கள் ஆற்றில் நீர்மிகுந்த காலங்களில் உட்புரையிட்ட மிதவைகளைக்கொண்டு நிலைபெற அமைத்த நீரணிமாடம் ஆதலின் இதனைப் பள்ளியோடம என்றும் மாடப்புணை என்றும் உரையாசிரியர் குறிப்பாராயினர்! இவ்வாறான மாடமிதவைகள் ஒன்றும் பலவுமாக, நீர்நிலைகளைக் கடக்க நிலைத்த பாங்கில் ஏற்ற இணைப்புக்களுடன் இருந்திருக்கவேண்டுமென்பதும், அதன் வழியாகவும் பிறபுணைகளின் வழியாகவும், அக்காலமக்கள் ஆறுகளைக் கடந்துள்ளார்கள் என்பதையும் சிலப்பதிகாரச் செய்திகளிலிருந்து சிந்தித்து அறிவதாகும். இத்தகைய மாடங்களுள் நீரணிமாடம் காவிரியைக் கடக்க நின்றதையும், வையையின் நடுவே நின்ற ஆற்றிடைக் குறையின் அடைகரையில் ஓங்கிய பாங்கில் நீர்மாடம் நின்றதையும் இளங்கோவடிகள்

எடுத்துக் காட்டுகின்ருர். வையையில் நீர் நிறைந்தோடிய காலங்களில் நிரைமாடம் ஊர்ந்த மக்களைப் பற்றியும் பரிபாடல் உணர்த்துகின்றது. இவற்றை எல்லாம்கொண்டு சிந்திக்கின் பண்டைத் தமிழகத்தில் மரப்புணை, நாவாய், முகப்புக்களோடுகூடிய அழகிய அம்பிகள் ஆகிய நீர்புணைகள் ஆறுகளைக் கடக்கும் உதவிப் பொருள்களாக நின்றதோடு, இவைகளினும் சிறந்த முறையில் நீர் நிறைந்த ஆற்றை எளிதில் கடக்க பள்ளியோடம் என்று பிற்காலத்தில் பெயரிடப்பட்ட நீர் மாடங்கள் நிலைத்து இருந்திருக்கின்றன என்று அறியமுடிகின்றது. புது நீர்விழாவிலும் நீரணிக் காலங்களிலும் இத்தகைய மாடங்கள் நீர்விளையாட்டயர்வார்க்கும் நீரணிகாண்பார்க்கும் பயன்பட்டுள்ளன என்பதையும் இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

கி. மு. நான்காம் நூற்ருண்டின் இறுதியில் (கி. மு. 327—325) வட இந்தியாவில் படையெடுத்த அலக்சாந்தர் என்னும் கிரேக்க நாட்டு மன்னன், சீலம் நதியைத் தம் வீராகள் கடக்க, படகுகளை இணைத்திட்ட மிதவை வழியும், ஆப்பிரிக்கா நாட்டின் நடுவிடத்தில் காங்கோ ஆற்றைச் சார்ந்த காடுகளில் வாழ்ந்த நாகரிகமற்ற மக்கள் எத்தகைய அறிவியல் முன்னேற்றமும் இல்லாத நிலையில், இயல்பாகவே, தேவைக்கேற்ப, உலர்ந்த மரக்கட்டை மிதவைகளை நிலையாக இணைத்துக்கட்டி அத்துறையே ஆறுகளைக் கடந்துசென்ற வரலாற்றுக் குறிப்புக்களையும்கொண்டு நோக்குவோமாளுல், யவன வணிகரின் புழக்கத்துடன் யவன நாட்டுத் தொழிலாளர் பலரின் வாழ்விடமாகவும் அமைந்து புதியன புனைந்து நின்ற தமிழகத்தில் அவர்களின் ஆக்க வேலைகளுள் ஒன்ருன ஆற்றைக் கடக்கும் நிலையான அமைப்பு முறைகளுள் ஒன்ருனதும் தமிழ் மக்கள் நீரணி மாடம் என்று பெயரிட்டு அழைத்ததுமான பள்ளியோடம் திருவரங்கத்தையும் உறையூரையும் இணைப்பதற்குரிய கருவியாகி நின்றதென்பது சிந்தித்து அறியத்தக்கதாகும். இத்தகைய மாடப்புணையினுல் இணைப்புற்ற நெடுந்துறை, பயனற்றபோதும், அரசியல் குழப்பக்காலங்களிலும் எளிதில் பிரித்து வழித்தொடர்பில்லாமல் ஆக்குதற்குரிய எளிமை உடையதேயாகும். மற்றைய காலங்களில் நீரணி மாடமாகிய நெடுந்துறை வழியே மக்கள் பயின்றுவந்தனர் என்பது போதரும்.

மற்றும், “மரங்கொல் தச்சரும், கருங்கைக் கொல்லரும்” வாழ்ந்த பண்டைத் தமிழகத்தில் ஆற்றைக்கடக்க நிலையானதொரு சிறுவழியை, பிறநாட்டுத் தொழில் வளர்ச்சியோடு நின்ற அக்கால அரசு அமைத்திருக்கக்கூடும். இக்குறிப்போடு நோக்கின், அரங்கத்திற்கும் உறையூர்க்கும் இணைப்பாக காவிரியாற்றில் நீர்மிகுந்த காலத்தில் தெப ்பங்களால் இணைக்கப்பட்ட நெடுந்துறையொன்று இருந்ததென்பது புலப்படும். அந்நெடும்புணை, ஆற்று நீர் அடைவுபெருமல் இடையே அழகுடன் வகிர்ந்தோடும் புரைகளுள்ளதாய் அமைந்திருந்ததினுலும், மாட அமைப்பில் அமைக்கப்பெற்றிருந்த ஒப்புமையினுலும் நீரணிமாடம் என்று பெயர் பெற்றிருந்ததென்பது

குறிப்பானறியலாகும்.[1] நிலத்தில் எழுப்பப்பட்ட மாடத்தினின்றும் பிரித்தறியவே நீரணி மாடம், நீர் மாடம் என்று பெயரிட்டிருந்தனர் என்பதும் பொருளுடையதேயாகும். இத்தகைய நீரணி மாடங்களின் வளர்ச்சியே சுடுமண்ணால் அமைக்கப்பட்ட மாடங்களோடு கூடிய வாராவதிகளாக பிற்காலத்தில் மாற்றம் பெற்றன என்பதும் தமிழக நாகரிக வளர்ச்சியின் சின்னமேயாகும்.

தீது தீர் நியமம் :

உறையூரின் வடக்கு எல்லையாக வரம்பிட்டு ஓடிய காவிரியின் தென்கரையில் இருந்த தெய்வ வழிபாட்டுக்குரிய சிறிய பகுதியே, குற்றம் நீங்கிய நியமம் என்று இளங்கோவடிகள் சுட்டிக் கூறியுள்ளார். நியமம் என்பது பொதுவாக கோயில் என்றே பொருள் பெறும். ஆற்று நீர் அணி செய்யும் அளவில் நீராடு படித்துறை மாடங்கள் நிறுவப்பட்டு நிற்க, அதனைச் சார்ந்து, தெய்வத் திருமேனிகள் பிரதிட்டை செய்யப்பெற்ற கோயில் இணைந்து. மூர்த்தி, தீர்த்தம், தலம் ஆகிய தெய்வமேன்மைக்குரிய மூன்று நிலையினையும் ஒன்ருகக் காணும மேன்மையுடன், சான்ேறாரால் நியமித்துவைக்கப் பட்ட தெய்வ நீராடு துறைகளே நியமம் என்று கூறப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. இச்சிறப்பினலேயே 'தீது தீர் நியமம்' என்று இளங்கோவடிகள் சிறப்பித்துக் கூறியுள்ளார். அப்பரடிகளும் திருப்பழனப்பதியத்துள், 'நீரார் நியமம் உடையார் தாமே' என்று நீராடு துறையுடன் அமைந்து நிற்கும் நியமச் சிறப்பினைக் குறிப்பிடுவதும் இக்கருத்தை வலியுறுத்துவதேயாகும். இத்தகுதிபெற்ற இடத்தைச் சார்ந்து நின்ற ஊரும் நியமம் என்றே பெயர்பெற்றிருப்பதை, சோழநாட்டில் கிடைத்துள்ள கல்வெட்டுச் செய்திகளில் குறிக்கப்பெறும் இடங்களாலும் அறியலாகும. இதனை, முத்தரையர் காலத்தில் தலைநகராகத் திகழ்ந்த காவிரிக்கரை நியமத்தையும், சோழர் காலத் தலைநகரான பழையாறை ஆயிரந்தளி நியமத்தையும் அப்பகுதிகளில் எஞ்சியதாகக் கிடைத்துள்ள சின்னங்களைக்கொண்டு ஒப்பிட்டுப்பார்த்து உறுதிசெய்ய இயலுகின்றது.

இத்தகைய வழிப்பாட்டுக்குரிய முச்சிறப்புடன் நியமிக்கப்பெற்ற குற்றமற்ற நியமப் பகுதியிலேயே நீரணிமாடமும் நிலைத்து நின்றது. இப்பகுதிக்குரிய நெடுந்துறையினைக் கடந்த பாங்கிலேயே தென்கரையில் உள்ள நியமப்பகுதியில் அடிவைத்த கண்ணகி கோவலன் கவுந்தியடிகள் ஆகிய மூவரும் அங்கிருந்த சோலையுள் தங்கினர்கள். அந்நிலையிற்ருன், வம்பப்பரத்தையொடு நின்ருெருவன், கோவலன் கண்ணகியை வடுப்படுத்திப் பேசியதால் குற்றப்பட்டு—கவுந்தியடிகளால் சாபம் இடப்பெற்று—பின்னர், சாப விடையும் செய்யப்பெற்ற நிகழ்ச்சிகளை அடிகள் விளம்பியுள்ளார்.

---

1 ஆற்றின் இருகரைகளிலும் அமைந்துள்ள கிராமங்களை இணைக்கும் பொருட்டு, இக்கால அரசியலார் அமைத்துள்ள முங்கிற்பாலங்களின் அமைப்பினை இவ்விடத்தில் ஒப்பிட்டுக்காணலாகும்.

இத்தகைய நியமப்பகுதியும் சோலையும் நின்ற இடம்; இன்று காவிரிக்கும் உறையூருக்கும் இடைப்பட்ட சதுப்பு நிலமாகத் தாழ்ந்து பரந்து கிடக்கும் பகுதியேயாகும். இப்பகுதி ஆறிடு மேடும் வழிந்தோடும் காலும் முயன்று மக்கள் ஆக்கிய செய்யுமாக திற்பதை இன்றும் காணலாகும். நெடிதாக அமைந்த இப்பகுதியின் இடையிடையே நிற்கும் துருத்திப் பகுதிகளைப் பத்தடிக்கு மேலாக அகழ்ந்து ஆராய்ச்சி செய்யின் பழங்காலச் சுவடுகள் கிடைத்தற் காகும். தொடர்ந்து, கண்ணகி ஓரிரவு தன் கணவனுடன் தங்கிய உறையூரைப் பற்றிய செய்திகளை ஆராய்வோம்.

பீடார் உறந்தை : (கோழியூர்)

சங்ககாலச் செய்யுட்களினால் அறியவாகின்ற சோழப் பெரு நகரங்கள் உறையூர், காவிரிப்பூம்பட்டினம் என்னும் இரண்டுமே யாகும். உறையூர் நாட்டின் நலைநகராகவும் காவிரிப்பூம்பட்டினம் துறைமுகப்பட்டினமாகவும் அமைந்திருந்தன உறையூர் உறந்தை எனவும் கோழியூர் எனவும் வழங்கப்படும்;

> "முறஞ்செவி வாரணம் முன்சமம் முருக்கிய
> புறஞ்சிறை வாரணம் புக்கனர்"

(முறஞ்செவி வாரணம்— யானை. புறஞ்சிறை வாரணம்—கோழி.) என, இளங்கோவடிகள் கூறுதலின், ஓர் கோழியானது யானை யொன்றைப் போரிலே தொலைத்த இடத்தில் அமைக்கப்பட்ட நகர மாதலின் கோழி என்று பெயராயிற்று எனவும், யானையை வெற்றி கண்ட கோழி தோன்றின இடம் வெற்றிக்குரிய வலியுடையதென்று கருதி, அவ்விடத்து அதன் பெயராலே சோழன் ஊர் அமைத்த பொழுது கோழியின் சிறையும் கழுத்துமாக ஆக்கியவதனால் புறம்பே சிறையை உடைய கோழி என்றாயிற்று என்றும் உரையாசிரியர் விளக்கிக் கூறியுள்ளார். சங்ககாலச் சோழரின் முதற் பெருந் தலைநகர் உறையூரேயாகும். அதனால் சோழ மன்னன் கோழியான் என்றும் அழைக்கப்பட்டான். அக்காலத்தில் சோழநாட்டுக் கடற் கரை வளநகராக இருந்த காவிரிப்பூம்பட்டினம் எப்பொழுது எதனால் தலைமைத் தலைநகராயிற்று என்பதைக் கண்டறிய தக்க சான்றுகள் கிடைக்கவில்லை. சிலப்பதிகாரத்தில் காவிரிப்பூம்பட்டினம் தலைநக ராக இருந்தது.

செல்வத்திற்கு உறைவிடமாக இருந்தது; சான்றோர்கள் பலர் உறைந்திருந்தனர்! எல்லா வளமும் உறையும் ஊர்; என்றெல் லாம் பொருள் கொண்டு உறையூர் என்ற பெயருண்டாயிற்றென்று அறிஞர் கூறுவர். மற்றும்,

> "மலர்புகழ்வண் தமிழ்ச்சோழர் வளநாட்டு மாமூதூர்
> உலகில்வளர் அணிக்கெல்லாம் உள்ளுறையூராம்
> [உறையூர்"

என்று, சேக்கிழாரும் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

சங்ககாலச் சோழருக்குத் தலைநகராக விளங்கிய உறையூர், 'மறங்கெழு சோழர் உறந்தை,' 'அறந்துஞ்சு உறந்தை,' 'செல்லா நல்லிசை உறந்தை,' 'பல நல்ல புலனணியும் உறந்தை,' 'கறங்கு இசை விழவின் உறந்தை,' 'அறங்கெழு நல் அவை உறந்தை' என்றெல்லாம் புலவர் புகழ்ந்துரைப்பதற்குரிய தகுதியோடு விளங்கியது. புகழ்ச் சோழர் கோப்பெருஞ் சோழர் ஆகியோர் பிறந்த இடமாகக் குறிக்கப்பெறும் புகழுடையது. கரிகால் சோழன், கோப்பெருஞ் சோழன், நலங்கிள்ளி, கிள்ளிவளவன் ஆகிய சங்ககாலச் சோழருடன் குலோத்துங்க சோழனும் ஆட்சி செய்த ஊர். புலவர்களில் இளம்பொன் வாணிகனார், ஏணிச்சேரி முடமோசியார், மருத்துவன் தாமோதரனார், முதுகண்ணன் சாத்தனார், முதுகூத்தனார் முதலிய புலவர்கள் வாழ்ந்த நகர். முத்துவீரியம் என்னும் இலக்கண நூலை இயற்றிய மூத்துவீர உபாத்தியாயருக்குரிய ஊர். இவைகளெல்லாம் உறையூருக்குரிய புகழ்ச்சி உரை ஆகும்.

இளங்கோவடிகள் சிறப்பித்த நகரங்கள் நான்கு. அவை,

> 'மாடமதுரையும் பீடார் உறந்தையும்
> கலிகெழு வஞ்சியும் ஒலிபுனல் புகாரும்'

என்று விளக்கப்பெறும் மதுரை, உறையூர், வஞ்சி, புகார் ஆகிய நான்கு நகரங்களேயாம். இவற்றுள் உறந்தையும் புகாரும் சோழருக்குரியவை. மதுரை பாண்டியர்க்கு உரியது. வஞ்சி சேரர்க்கு உரியது. இவ்வாறு மூவேந்தருக்கும் உரிய தலைநகரங்கள் கூறப்பட்டதாயினும், சோழருக்குரிய உறந்தையும் புகாரும் ஆகிய நகரங்களுள், பொதுவறு சிறப்பின் புகாரென்றும். பேராச் சிறப்பின் புகார் என்றும் இளங்கோவடிகள் புகாரைச் சிறப்பித்திருப்பதால் அவர் காலத்தில் உறையூர் பழமைக்குரிய பெருமையோடு பெருநற்கிள்ளி எனற சோழமன்னனின் காவலில் இருந்ததென்பது போதரும் உறந்தைக்குரிய பெருவிழா பங்குனித் திருவிழாவாகும். அதனோடு புதுநீர் விழாவும் பொலிந்து நின்றதால் "கறங்கு இசை விழவின் உறந்தை" என்று அகப்பாட்டில் சிறப்பிக்கப்பெற்றது.

காவிரியின் நீர் அலைத்துநின்ற சிறு மதகுகளுடன் ஊர்ப்புறமாக ஆற்றங்கரையை அடுத்த கொல்லைப் புறங்களையும் உடையதாக உறையூர் அமைந்திருந்தது. இதனை,

> 'புனல்பொரு புதவின் உறந்தை'
> 'காவிரிப் படப்பை உறந்தை'

என்னும் அகநானூற்றடிகள் நன்கு புலப்படுத்துகின்றன.

'உள்ளாற்றுக் கவலை புள்ளி நீழல்' (புறம்–219) வடக்கிருந்த கோப்பெருஞ் சோழனும், அவன் குறிப்பிற்கு ஏற்ப உடனுக வடக்கிருந்த அரச சுற்றமும் நடுகற்களாக நின்ற பகுதியும் இக்காவிரிப் படப்பையுள் நின்ற வண்டல் குறைப் பகுதியேயாம்.

கி. பி. 130-ல் கடற்செலவிற் புகழ்பெற்ற மேனாட்டு அறிஞர் தாலமி (Ptolmy)யின் யாத்திரைக் குறிப்பிலும் உறையூரின் சிறப்பியல்புகள் குறிக்கப்பட்டன. கி. பி. 346-ல் மாரிசு எரித்தராவி

(Maris Erytharli) என்பவரும் உறையூரின் பெருமைகளைக் குறிப்பிட்டுள்ளதாக வரலாறுகள் கூறுகின்றன. உரோமரின் வணிகத் தொடர்பு உறையூரில் இருந்தவுண்மைக்கோர் சான்றாக யவன நாட்டு நாணயங்கள் இப்பகுதியில் புதைபொருளாகக் கிடைத்திருக்கின்றன. இவ்வாறு, சங்ககாலத்தில் பல்வளமும் பெருக்கி நின்ற பழமையுடன் சிலப்பதிகார காலத்தில் விளங்கிய உறந்தையின் அமைப்புடன் பெருமையினையும் ஓரளவு தொகுத்துக் கூறியுள்ளேன்.

வரலாறுகொண்ட உறந்தை :

தமிழக வரலாற்றுச் சான்றுகளுள் ஒன்றாக அமைந்துள்ள கல்வெட்டுகளுள் உறந்தையைப் பற்றிய செய்திகள் உரைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழனுடைய ஆட்சிக்காலத்தில் (கி. மு. 957—970) 'உறையூர் கூற்றத்து உறையூர்' என்ற அளவில் உறையூர் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர், முதல் இராசராசன், முதல் ஆகியோர் காலங்களில், 'ஏரளாந்தக வளநாட்டு உறையூர் கூற்றத்து உறையூர்' என்றும், வீரராஜேந்திரன் காலத்தில் 'இராச கெம்பீர வளநாட்டு உறையூர் கூறறத்து உறையூர' என்றும், குலோத்துங்கள் காலத்தில் 'இராச மகேந்திர வளநாட்டு உறையூர் கூற்றத்து உறையூர்' என்றும், பிற்காலங்களில் 'திருச்சிராப்பள்ளி உசாவடி இராசகெம்பீர வளநாட்டு உறையூர் என்றும் 'சிவபாத சேகரபுரத்து உறையூர்' என்றும். கம்பணவுடையார் காலத்தில் (கி. பி. 1374-75) 'மழைநாட்டு உறையூர', 'தென்கரை உறையூர்' என்றும் தமிழகக் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளன.

வடக்கயிறு தேய்ந்து தனைக்கயிறு ஆனதைப் போன்று உறையூரின் நிலை காலப்போக்கில் வரவரக் குறுகி காவிரியின் தென்கரை ஊர்களுள் ஒன்றாகி நின்றதைக் கல்வெட்டுச் சான்றுகளே புலப்படுத்துகின்றன.

உறையூர் கூற்றத்துள், நாவலூர், தலைவாய்ப்பாடி. நாநலூர், கொடியாலத்தூர், கருப்பூர், பருத்திக்குடியான தமபிக்கினியான் நல்லூர், அமணகுடி. அல்லூர், சாதனூர், திருவடகுடி, மேக்குடி, கற்குடி, சகதேகவீரச் சதுர்வேதி மங்கலம், புலிவலம், உறையூர் ஆகிய ஊர்கள் அடங்கி இருந்தன. உறையூர் கூற்றம், வடக்கே காவிரியும், தெற்கே உய்யக்கொண்டான் ஆற்றுடன் கற்குடி மலையும், கிழக்கே சிராப்பள்ளி குன்றும், மேற்கே குளிர்தண்டலையும் (குளித்தலை) எல்லைகளாக அமைந்திருந்ததென்று அளவிட்டறியலாகும்.

உறையூரும்—குன்றும் :

சங்ககாலத்தில் சோழநாட்டின் தலைநகராகவும் சரித்திர காலத்தில் ஒரு கூற்றத்தின் தலைமை ஊராகவும் நின்ற அளவில் உறையூர் ஓரளவு சிறப்புடன் இருந்ததாகவே தெரிகின்றது. சங்ககாலத்தில் உறையூர்க்கு கிழக்கே ஒரு நெடிய குன்று இருந்ததென்று குறிக்கப்பட்டது. இதனை,

"கறங்கு இசை விழவின் உறந்தைக் குணாது
நெடும் பெருங் குன்றம்" (அகம்—4)

என்னும், அகநானூற்றடிகள் விளக்குகின்றன. அதுவே, இப்பொழுது கோட்டையும் கோயிலுமாக நிற்கும் சிராப்பள்ளி குன்றாகும் சங்ககாலத்தில், இம்மலைமேல் கோயிலோ பிறவாறு சுட்டுவதற்குரிய சின்னங்களோ இல்லை. உறையூர்க்கு கிழக்கே தனித்து உயர்ந்து நின்ற மலைஎன்ற அளவில் கூறப்பட்ட பின்னர். மலையிலுள்ள குகையொன்று சமண முனிவரின் வாழ்விடமாக அமைந்து கற்படுக்கைகளுடன் விளங்கியது. அங்கு வாழ்ந்த சமணத் தலைவரின் பெயர் சிரா என்பதென்றும், அத்துறவிக்குரிய கற்படுக்கை இருந்தமையால் சிராப்பள்ளி என்ற பெயர் உண்டாயிற்று என்றும் கூறுவர். இக்கருத்திற்கு ஏற்ப இம் மலையின் வடபுறம் அமைந்துள்ள குகையொன்றில் கற்படுக்கைகளும் பிராமிய எழுத்தாலான கல்வெட்டுகளும் உள்ளன.

கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தென்னாடெங்கனும் சைவநலம் பெருக்கிய திருஞான சம்பந்தர், மூங்கில் காடுகள் உயர்ந்து நிற்கும் சாரலோடு, கல்லும் செந்தன் புனமும் சுனையும் சூழ்ந்து சிராப்பள்ளிகுன்று நின்றதென்றும், அதன் மேல் தொலைவாக கோயில் அமைந்திருந்ததென்றும் தமது பதியப்பாடலுள் விளக்கியுள்ளார். எனவே, சிராப்பள்ளி மலையின்மேல் சிவன்கோயில் அமைக்கப்பட்ட காலம் கி, பி; ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னராகும்; என்ற அளவில் கூறத்தகும்.

சிராப்பள்ளி குன்றில் சிவன்கோயில் விளங்கிய காலத்திலேயே உறையூரில் சிவன்கோயிலும் திருமால்கோயிலும் சிறப்புற்றிருந்தன. சிவன் கோயிலிலுள்ள கல்வெட்டுச் செய்திகளால், வேந்தன்—முக்கீசுவரம் உடையார், திருவிடைத்தலை மகாதேவர் என்ற பெயர்களுடன் இறைவன் அழைக்கப்பட்டுள்ளார். கோழியூர் என்ற பெயருண்டான கதையைச் சித்தரிப்பதாக, கோயிலின் தூணொன்றிலும், அம்மன் கோயில் கீழ்புறச் சுவரிலும் யானையொன்றை கோழி மத்தகத்தில் தாக்குவதைப் போன்ற சிற்பம தெளிவாகச் செதுக்கப்பட்டுள்ளன. இன்று இறைவனின் பெயர் ஐவண்ணப் பெருமான். (பஞ்சவர்ணேஸ்வரர்) இறைவியின் பெயர் ஒளிமதியம்மை (காந்திமதியம்மை) என்பதாகும். முத்தரையர் காலத்தில் நங்கை ஒளிமதியார் என்ற அரசியின் பெயர் செந்தலைக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றிருப்பது இவ்வம்மையின் பெயராகவும் இருக்கக்கூடும். வேந்தன் முக்கீசுவரத்தடிகளை திருஞான சம்பந்தர் பாடியுள்ள திருப்பதியத்துள் தமிழக வரலாற்றிலச்சினைகள் நிறைந்துள்ளன. கி. பி. ஏழாம் நூற்றாண்டிலோ அதற்கு முன்னரோ சேர சோழ பாண்டிய நாடுகளின் ஒருமைப்பாட்டிற்கு உறையூர் எல்லையாக நின்றதை அப்பகுதிகள் விளக்குகின்றன. அவை,

1 'செருவி லாரும்புலி செங்கய லானையினன் செய்த
பொருவில் முக்கீச்சரம்'

2 'ஒண்புலால் வேல்மிக வல்லவ னேங்கெழிற் கிள்ளிசேர்
பண்பின் முக்கீச்சரம்.'

3 ‘தென்னன் கோழி யெழில் வஞ்சியு மோங்கு செங்கோலினன் மன்னன் முக்கீச்சரம்.’

4 ‘சீரின லங்கொளிர் தென்னவன் செம்பியன் வில்லவன் சேரு முக்கீச்சரம்.’

5 ‘மல்லையார் மும்முடி மன்னர் முக்கீச்சரம்’ என்னும் பகுதிகளேயாகும்.

இவற்றைக் கொண்டு சிந்திக்கின், சேர சோழ பாண்டிய நாடுகளின் எல்லைகட்குரிய கூடல் பகுதியாக ஒரு காலத்தில் உறையூரின் கீழ்ப்பகுதி இருந்ததென்பதும், மூன்று நாட்டு அரசர்களின் புழக்கம் உள்ள தலமே முக்கீச்சரம் என்பதும் பெறப்படுவதுடன் பல்லவரின் தொடர்பும் இக்கோயிலளவில் இருந்த செய்தியும் புலனாகும். இப்பதிகத்தொடர்கள் வரலாற்றுராய்ச்சிக்குப் பெரிதும் இடம்பெறத்தக்கதாக அமைந்துள்ளமை நோக்கத்தக்கதாம். மற்றும், சோழ நாட்டின் எல்லைப் பகுதிகளுள் ஒன்றாக உறையூர் நின்றதெனும் கருத்திற்குச் சார்பாக, இளங்கோவடிகளும் புகார் முதல் தொடங்கும் கண்ணகி வரலாற்றின் முதற் பெரும் பிரிவை, உறந்தை அளவில் (புகார்க் காண்டம்) முடித்துள்ளார் என்பது அறியற்பாலதாம்.

உறையூர்-வேந்தன் முக்கீச்சரம்:

சேரர், சோழர் பாண்டியர் ஆகிய மூவேந்தரும் வழிபட்ட ஈசுவரம் என்பதாகவோ, மூன்று நாட்டு எல்லைகளிலொன்று கூடுமிடத்திலுள்ள ஈசுவரம் என்பதாகவோ பொருள் கொள்ளுவோமாயின், முக்கூட்டு ஈச்சரம் என்றிருந்த பெயரே காலப்போக்கில் குறைந்து முக்கீச்சரம் என்று வழங்கப்பட்டதாகும். முக்கீச்சரத்தடிகள் என்று சம்பந்தர் போற்றிய பெருமான், ஐவண்ணப் பெருமான் (பஞ்சவர்ணேஸ்வரர்) ஆகியதற்கு, பழங்கதையொன்று கூறப்படுகின்றது.

உறையூரில் வாழ்ந்த சூர ஆதித்த சோழன் என்பான், நாக கன்னிகையாகிய காந்திமதியை மணந்து, நாகலோகத்திலிருந்து கொண்டுவந்த ஐந்து இலிங்கங்களை ஓரிடத்தில் பிரதிட்டை செய்ய முயன்றபோது, அவை ஒன்றாகி ஐவண்ண இலிங்கமாகத் தோற்றமளித்ததென்றும், அம்மன்னனே கோயிலைக் கட்டினான் என்றும் அக்கதை கூறுகின்றது. இதற்கேற்ப முக்கீச்சரத்திற்குரிய மூலவர் திருமேனியாகிய இலிங்கம் ஒருபாதியாய் அமைக்கப்பட்டுள்ளதுடன், சித்திரலிங்கம் என்றும் சுட்டப்பெறுகின்றது. இலிங்கத்தில் ஏதோ சிற்ப இலச்சினைகள் இருப்பதினாலேயே சித்திரலிங்கமென்று சிறப்புப் பெயர் பெற்றுள்ளது போலும்!

இக்கோயிலில் பல பழைய கல்வெட்டுகள் இருந்தன. அவற்றை. கி. பி. 1890-ல் கல்லெழுத்துக் காப்புத்துறையினர் (Epigraphy) பதிவு செய்துள்ளனர். “புதிதுறப் பணிகள் வேறு புரிவதன் பழைய தொன்றை விதியுளி புதுக்குவோர்க்கு மிக்க புண்ணியந்தான் எய்தும்” என்னும் கச்சியப்ப முனிவரின்

திருவாக்கிற்கிணங்க, நாட்டுக்கோட்டை நகரத்துச் செட்டியார்களின் திருப்பணியால் தென்னாட்டிலுள்ள பழைய திருக்கோயில்களில் பெரும்பாலானவை புதுப்பிக்கப்பெற்றுள்ளன. அத்துறையில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வேந்தன் முக்கீச்சரம், தேவகோட்டை, சித. முரு. முருகப்ப செட்டியார் அவர்களின் திருப்பணியால் புதுப்பிக்கப்பெற்றிருக்கின்றது. அப்பொழுது பழைய கல்வெட்டுகள் நிலைபெயர்ந்துபோயின. இக்கோயிலுக்கு உரியதாக திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் புராணமொன்று பாடப்பெற்றுளது. கோயிலின் தெற்குத் திருச்சுற்றிடத்தில் அமைக்கப்பட்டுள்ள திருமேனிகளும் படிமங்களும் பழமைக்கோர் எடுத்துக்காட்டாகவுள்ளன. அவற்றுள் ஒன்றாகும் உதங்க முனிவரின் திருவுருவம் சிற்பத்தால் சிறந்து விளங்குகின்றது.

முக்கீச்சரத்தைச் சார்ந்து கமலவல்லி நாச்சியார் கோயில் என்னும் வைணவத்தலம் விளங்குகின்றது பழமைக்குரிய சின்னங்கள் நிறைந்துள்ள இக்கோயிலை அணி செய்யும் தூண்களுள் சிங்கவுருவத்துடன் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்து பெருமிதத்தோடு இணைந்து நிற்கும் தூண்கள் காட்சிக்கு விருந்தாகும். பிற்காலச் சோழரின் தனிச் சிறப்புடன் தமிழகத்தில் வளர்ச்சியடைந்த சிற்பத் திறனுக்கு இவை ஓர் எடுத்துக்காட்டாகும்.

சிதைந்த உறந்தை :— ஆற்று அழிவு.

பலவளங்களோடு காவிரியாற்றின் தென்கரையில் நின்ற உறந்தை பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆற்றின் வெள்ளத்திற்கு உள்ளாகி இருக்கவேண்டுமென்று தெரிகின்றது. உறையூர்க்கு மேற்கேயுள்ள அல்லூர் என்னும் இடத்தில் காவிரியாறு பெருகி உடைப்பு ஏற்பட்டதால், அப்பகுதிக்குக் கீழ்ப்புறமுள்ள உறையூரும் வெள்ளத்தால் ஓரளவு அழிவு பெற்றிருக்க வேண்டுமென்பதை அறிய முடிகின்றது. இதனை,

> “மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரிவர்மர்க்கு யாண்டு 37-வது, இவ்வாண்டு உறையூர் கூற்றத்து அல்லூர் தலைவாச்சான்றேம பதினெருவேசம். இவ்வூர் எங்கள் நிலம் வெட்டிப்பேறு அல்லூர் ஊரின் வடகிழக்கின் நிலம் காவேரி பெருகி குலை உடைத்து மணலிட்டுப் புன்செய்யாகக் கிடக்க, ஆறெழர்ட்டைக் கால் பயிர் ஏறாதே பாழ்கிடக்க இந் நிலத்தை விலைக்குக் கொள்வாரில்லையோ வென்று முற்கூற. அல்லூர் சிறியான் புல்லன்” — விலைக்குக்கொண்டு — நிபந்தம் செய்தான். (S. I. I. Vol-No. VIII Ins-No. 689.)

என்னும் அல்லூர் கல்வெட்டுச் செய்தியினால் நன்கு உணரலாகும், இவ்வாறு காவிரி வெள்ளத்தால் உறையூர்க் கூற்றம் பன்முறையும் தாக்கப்பட்டு காலப்போக்கில் பள்ளமும் மணல் மேடுகளும் நிறைந்த பகுதியாக இருக்கின்ற தென்பதை உறையூர் கூற்ற எல்லைக் குள்ளாகும் திருப்பராய்த்துறை அளவிலும், பழைய ஓடைகளும் மணல்

மேடுகளும் இன்றும் எஞ்சி நிற்பதே சான்றாகும். பராய்த்துறைக்குக் கிழக்கே உள்ள எலமனூர் என்னும் பகுதிக்கு நேர்வடக்கே காவிரியில் கொள்ளிடம் என்னும் பேராறு பிரிக்கப்பட்டுள்ளது. கவர்த்து இழிந்தோடும் ஆறுகளுக்கு இடையே அரங்கப்பகுதி தொடங்குகின்றது. எனவே, காவிரியில் வெள்ளம் வரும்போது அரங்க முகப்பில் மோதுதலால் அகன்ற காவிரியின் விளிம்பில் நீர் ஏற்றம் பெற்று வழிந்தோடுவதும், வெள்ளம் மிகுந்தபோது கரையில் உடைப்பு ஏற்படுவதும் இன்றும் இயல்பாகவே இருந்து வருகின்றது. பழங்காலத்திலும் இந்நிலை ஏற்பட்டுள்ளதை அல்லூர் கல்வெட்டுச் செய்தியால் அறிகின்றோம். எனவே, உறையூர் கூற்றத்துள் காவிரியின் தென்கரைப் படப்பையுள் நின்ற உறையூரும் பிற ஆற்றங்கரை ஊர்களும் பலகாலங்களில் வெள்ளப்பெருக்கிற்கு உளளாகி அழிவு பெற்றிருக்கவேண்டுமென்பது உண்மையே யாம்.

'கோப்பெருஞ் சோழனும். அவன் குறிப்பிற்கு ஏற்ப உடனுகை வடக்கிருந்த அரச சுற்றமும், உறையூரைச் சார்ந்த கரைப்பகுதியினுள் வழிகொண்டோடிய கவர்த்த நீரோடு காலகளுக்கு உட்பட்டுயர்ந்த மேட்டில் நின்ற மரத்தடியில் நடுகற்களாக நின்றனர்' என்ற புறநானூற்றுச் செய்திக்குரித்தான பகுதியும் இப்படப்பைப் பகுதியேயாம், இப் பகுதிக்குரிய எல்லை, இன்றுள்ள உறையூர்க்கு மேற்கே நான்கு கல் தொலைவிலுள்ளதும் பழைய உறையூர்க்கு மேற்கு எல்லையாக நின்றதுமான மேக்குடி என்னும் சிற்றூரிலிருந்து கிழக்கே தொடரும் தென்கரைப்படுகைப் பகுதியேயாகும். இன்று இப்பகுதி, வண்டல்மண் படிந்திட்ட திட்டுகளாகவும். ஆற்றுநீர் பெருகி வழிந்தோடும் சதுப்பு நிலங்களாகவும், திருத்தப்பட்ட நன்செய் புன்செய் நிலங்களாகவும் காட்சியளிக்கின்றன.

பகையால் அழிவு :

கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மூன்றும் இராசராசசோழன் சோழநாட்டை அரசாண்டனன். ஆற்றலில் குறைந்த நிலையில் ஆட்சி செலுத்திய இவ்வரசனை, அப்பொழுது பாண்டிய நாட்டில் ஆட்சிபுரிந்த மாறவர்மன் சுந்தரபாண்டியன் வென்று, சோழநாட்டை அடிமைப்படுத்த விரும்பினான். அதற்குரிய காரணம், பாண்டியனுடைய இளமைக் காலத்தில், மூன்றாம் இராசராசனுக்கு முன்னர் சோழநாட்டை ஆண்ட மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய நாட்டின்மேல் படையெடுத்துச் சென்று, நிகழ்த்திய கொடுமைகளை நேரில் கண்டவனாதலின், அந்நிகழ்ச்சி இவன் உள்ளத்தை உறுத்திக்கொண்டிருந்தது. எனவே, பழிவாங்கும் நோக்குடன் காலங்கருதி பெரும் படையைச் சேர்த்துவந்த சுந்தரபாண்டியன், கி. பி. 1219-ல் சோழநாட்டின்மீது படையெடுத்தான். சோழர்படை எதிர்த்ததாயினும், வலிகுன்றிய நிலையில் பின் வாங்கின. முதல் வெற்றி பாண்டியனுக்கு உறையூரிலேயே கிட்டியது. வெற்றி வெறியும் பழிவாங்கும் கொடுமையும் ஒன்றான நிலையில் நின்ற பாண்டியனின் ஆணையால் உறந்தைப் பெருநகர் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. மாட மாளிகைகளும் கூட கோபுரங்

களும் ஆடரங்குகளும் அரசுக்குரிய சின்னங்களும் இடிக்கப்பட்டன. நீர்நிலைகள் அழிக்கப்பட்டன. இந்நிலை பாண்டிநாட்டு வீரரால் தஞ்சைக்கும் நேர்ந்தது. இவ்வழிவுச் செயலை, சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி மிக்க விரிவாகவே புகலுகின்றது.

மெய்க்கீர்த்தியுள்,

'வெஞ்சின விவுளியும் வேழமும் பரப்பித்
தஞ்சையும் உறந்தையும் செந்தழல் கொளுத்திக்
காவியு நீலமு நின்று கவினிழப்ப
வாவியு மாறு மணிநீர் நலனழித்துக்
கூடமு மாமதிலுங் கோபுரமு மாடரங்கும்
மாடமு மாளிகையு மண்டபமும் பலவிடித்துத்
தொழுதுவந் தடையா நிருபர்தந் தோகையர்
அழுத கண்ணீ ராறு பரப்பிக்
கழுதைகொண் டுழுது கவடி வித்திச்
செம்பியனைச் சினமிரியப் பொருதுசுரம் புகவோட்டி—"

இப்பகுதியினால் பாண்டியன் சோழநாட்டில் செய்த அழிவுகளை நன்கு அறியலாகும்.

இதனால், உறந்தை கொளுத்தப்பட்டு, நீர்நிலைகள் அழிக்கப்பட்டு, உயர்ந்த கட்டிடங்கள் இடிக்கப்பட்டு தரைமட்டமான நிலையில், கழுதைகொண்டு உழுது, கவடி என்னும் பூண்டினை விதைத்தான் சுந்தரபாண்டியன் என்றால், அவனுக்கிருந்த பகைமையும் பழிவாங்கும் திட்டமும் இத்துணை அளவுடையதென்று சொல்லற்கியலாதன்றோ! எனவே, ஆற்றழிவால் குறுகிநின்ற உறையூர், கி. பி. 13ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பகைவர் படையெடுப்பினால் நிலையழிந்துபோயிற்று என்றே கொள்ளத்தகும். இவ்வாறு, ஆற்றழிவோடு பகையழிவுக்கும் இலக்கான உறையூரின் மேற்குப் பகுதி அழிந்த நிலையோடு மறைந்துபோக, கிழக்குப்பகுதியில் பழைய வாழ்விடத்தையும் உரிமைப் பொருள்களையும்விட்டு நீங்க மனமில்லாத மக்கள் கோயில்களைச் சார்ந்த நிலையில்இயன்ற அளவில் ஊரைத் திருத்தி அமைத்துக்கொண்டு வாழ்ந்திருக்கின்றனர். இந்நிலையில்,

கி பி 1310-ல், பாண்டியநாட்டுப் பேராட்சிக்கு, சடையவர்மன் சுந்தரபாண்டியன், சடையவர்மன் வீரபாண்டியன் ஆகிய இருவரும் போட்டியிட்டனர். வீரபாண்டியனை ஒழிக்கக்கருதிய சுந்தரபாண்டியன் வடநாட்டில் இருந்த முகம்மதிய அரசன் அல்லாவுடீன் கில்ஜியின் உதவியை நாடினன். தமிழகத்தின் செல்வ வளத்தைக் கேள்விப்பட்டு பேராசைக்குறியுடன் இருந்த கில்ஜியின் எண்ணம் எளிதில் கைகூடியது. அதற்குத் துணையாக தனியொருவனாகிய சுந்தரபாண்டியனின் அதிகாரத் தன்னலம் தமிழகத்தை முகம்மதியரிடம் காட்டிக்கொடுத்தது. எனவே, அல்லாவுடீன் கில்ஜியின் படைத் தலைவனான மாலிக்காபூர் என்னும் வீரனுடைய தலைமையில் பல்லாயிரக் கணக்கான கொடிய முகமதிய குதிரை வீரர்கள் தென்னகத்தின்மீது படையெடுத்தனர், அப்பொழுது எதிர்கொண்டு ஏற்ற நிலையில் சுந்தரபாண்டியனும் வந்தான். அவர்கள் பாண்டிநாடு

நோக்கி வகுத்துக்கொண்ட படைப்பிரிவில் ஒன்று. சிதம்பரத்தைக் கொள்ளையடித்த பின்னர் திருவரங்கத்தை முற்றுகையிட்டிருக்கின்றது. கோயில்களிலேயே நிறைந்த செல்வங்களும் நவமணிகளும் தங்கச் சிலைகளும் இருக்குமென்ற நோக்குடன் பழிக்கு அஞ்சாது சிற்பந்தாக்கிகளாக பொருள் வெறியுடன் தமிழகத்தில் நுழைந்த முகம்மதிய வீரர்களிடமிருந்து திருவரங்கம் கோயிலையும், திருமேனிகளையும் காக்க, வைணவரும் பட்டர்களும் செய்த தியாகங்கள் வியக்கத்தக்கனவாகும். ஒருவாறு அரங்கத்தை அழிவு செய்த பின்னர், மதுரையை நோக்கிய முகம்மதிய படைக்கு, அடுத்து வழியிலுள்ள உறையூர், அக்கொடியவரின் விளையாட்டுகளாக நிகழ்ந்த, ஊர்களை அழித்தல், தீயிடல், பயிர்களை அளித்தல், கோயில்களையும் சிற்பங்களையும் சிதைத்தல், எதிர்த்தாரையும் எதிர்ப்பட்டாரையும் கொல்லுதல். பெண்களைக் கற்பழித்தல் ஆகிய செயல்களுள் ஒரு சில கொடுமைகட்காவது இலக்காகாமல் இருப்பதற்கு இயலாது. ஆதலினால், கி பி 1310-ல், உறையூரின் எஞ்சிய செல்வமும் பறிபோக, மக்கள் யாவரும் பஞ்சையராகி, நிலைத்து வாழ அஞ்சி, கொஞ்சங்கொஞ்சமாக ஊரைவிட்டு கிழக்கே சிராப்பள்ளிக் குன்றைச் சார்ந்து குடியேற்றம் பெற்றும், பிறநாடு நகரங்களை நாடி குடிபெயர்ந்தும் சென்றிருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது. இவ்வாறு, அரச வளங்களோடு சிறந்திருந்த உறையூர் அழிந்துபோக, சிதைந்த நிலையில் இருந்த பழங்கோயில்களுடன், இடம் பெயரவியலாத ஏழை மக்கள் சிலருடன பெயரளவில் ஒரு கிராமமாக உறையூர் பிற்காலத்தில் இருந்திருக்கின்றது.

இன்றைய உறந்தை;

ஊர் என்று கூறுவதற்கு அருகதையுடைய அங்கங்களோடு விளங்கியதினாலேயே "ஊரெனப்படுவது உறையூர்" என்று திட்பமுடன் கூறப்பட்டது பழைய காலத்தில் உறையூரைச் சுட்டியே சிராப்பள்ளிக் குன்றினை அறியமுடிந்தது. இன்று சிராப்பள்ளி நகரைச் சுட்டியே உரையூரைத் தேடியறிய முடிகின்றது. இந்நிலையை நோக்கின், அரசு பறிபோனதுடன் ஆள் உருவும் மாறிப்போன அரசனொருவன் எளியனாகியும் பழைய பட்டாடையுடன் நின்றதைப்போல, உறையூர் பழங்கோயில்களுடன் சிற்றூராக நிற்க, வாழவழியின்றி வறிதே பருத்துநின்றானொருவன் அறிவும் திருவும் ஆட்சியும் பெற்றுயர்ந்ததைப்போல, பெருங்குன்று சிராப்பள்ளியாகி தாயுமானார் தலமாகி கோட்டை சூழ்ந்த மாடமாளிகைகளுடன் பெருகி, மக்கள் நிரம்பிய பெருநகராய் நிற்பதாயிற்று. இன்றைய உறையூர் திருச்சிராப்பள்ளி நகரின் வளர்ச்சிப் பகுதியாக உருப்பெற்று வருகின்றன. இதுவே, காலத்தின் கோலமாகும். எனினும், கண்ணகியின் காலடிச் சுவடுகளைப்பெற்ற மேன்மையினையும், மணியரிச் சிலம்பின் ஒலிகேட்ட சிறப்பினையும், புகார் முதல் வஞ்சி வரையில் பெற்று நிற்கும் நெடுவழியுள் இத்தொன்னகரும் ஒன்றாகும் என்பதை நினைக்கும்போது உறையூர் நின்ற மண்பரப்பு அத்தனையும் பெருமை பெற்று நிற்கின்றது.

(தொடரும்)

இலக்கண தீபம்

(பழைய ஏட்டுச்சுவடியினின்று எடுத்தளித்தவர்: வே. நடராசன்)

முன்னுரை:—

இலக்கண தீபம் எனப் பெயரிய இந்நூல் ஒன்பது விருத்தப் பாக்களால் அமைந்தது. இது இலக்கண அமைதியுடைய செய்யுளின் தன்மை. இத்தகையதெனக் கூறு மாற்றால் தமிழின் கண்ணுள்ள எழுத்து, சொல், பொருள், அணி என்ற நான்கினிலக்கணங்களையும் நவில்கின்றது. யாப்பியல் ஒன்றே கற்றுச் செய்யுளியற்றப் புகுந்து இடர்ப்படுவார்தம் நலன்கருதி பிற இலக்கணங்களையும் மிகச் சுருங்கிய அளவில் விளங்கும் வண்ணம் தொகுத்துக் கூறுகின்றது. இவ்வாறு செய்யுளியற்றுவார் பிற இலக்கணங்களையும் அறிந்துகொண்டு, அவை பிறழாது இயற்றும் செய்யுட்களே இலக்கணக் கவிதைகளாமெனவும் அல்லாதவழி அவை அவலக்கணக் கவிதைகளாமெனவும் ஆறும் எண்ணுள்ள செய்யுள் ஒழிய எஞ்சிய ஒவ்வொரு செய்யுளின் ஈற்றடியிலும் கூறப்படுகின்றது. இந்நூல் முதலிரண்டு பாக்களால் எழுத்திலக்கணமும் அடுத்து நான்கு பாக்களால் சொல்லிலக்கணமும் அதற்கடுத்த இரண்டு பாக்களால் பொருளிலக்கணமும் ஈற்றுப்பாவால் அணியிலக்கணமும் இயம்புகின்றது.

இனி இந்நூல் செய்தார் இன்னாரெனத் தெரிந்திலது. இந்நூலின் படியொன்றைத் திருமிகு. இரா. இராகவையங்கார் அவர்களிடமிருந்துபெற்று செந்தமிழ் இதழாசிரியர் செந்தமிழ்த்தொகுதி கச பக்கம் உ௩அ இல் வெளியிட்டுள்ளார்கள். தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் இந்நூலின் பிறிதொருபடி கிடைத்துள்ளது. அதனை செந்தமிழில் வெளிவந்த பாடல்களோடு ஒப்பிட்டு நோக்கியதில் சில பாட வேறுபாடுகள் காணப்பட்டன. இந்நூல் வெளிவந்து (1915) பலயாண்டுகள் கழிந்து விட்டமையாலும், சிலபாட வேறுபாடுகள் காணப்பட்டமையாலும் நூலின் சிறப்பு நோக்கியும், நலன் கருதியும், மீண்டும் சரசுவதிமகால் நூலகச் சுவடியின் (MSS. No. 649 (a) பாடத்தைக்கொண்டு இந்நூல் வெளியிடப் பெறுகின்றது.

எழுத்தென்ன வொலியொரு தொகைத்தா (யெழுந்து) முதல்
சார்பிரு வகைத்தாயெழுந்
தீரிரு வகைப்பேரிலீரிரு வகைத்தாய் முறை
யினத்திலெண் ணிருவகைத்தா
யொழுக்கும் பிறப்பிடத் தீரிரு வகைத்தா
யுழப்பிலே ழிருவகைத்தா
யுள்ளவடி வம்புள்ளி புள்ளியில் லாதென்னு
முருபிலோ ரிருவகைத்தா

வழுக்கின்றி மாத்திரையி னவகைத் தாய்மூன்று
வழிமொழியின் மூவகைத்தாய்
வந்துயி ருடற்போலி யிருவகைத் தாய்மூ
வகைச்சாரி கைத்தாய்நடந்
தழுக்கின்றி விரியொன்றி னூற தாமெழுத்
ததிகார லக்கணமெலா
மறிந்து சொல்வதி லக்கணக் கவிதை யல்லாத
தவலக்கணக் கவிதையே (க)

எண்ணிய வெழுத்திலே யோரெழுத் துப்பதந்
தொடரெழுத் துப்பதமிரண்
டிதிலுயிரு மெய்யுமுத லீருன பதநான்
கினிப்பகாப் பதம்பகுபதம்
பண்ணினவை யெட்டினும் பெயர்வினை யிரண்டிற
பகுப்பவீ ரெட்டிடையுரிப்
பாலுமீ ரெட்டாக வெண்ணான்கு பதமுமப்
பதம்பகுதி யொடுவிகுதியுந்
திண்ணிய பதத்துடன் பதமும் பதத்துடன்
சேருருபு மெனமூவகைச்
செப்பும் புணர்ப்பு மிடைசந்தி சாரியைச்
செயலும்வி காரவகையு
மெண்ணியசொல் வேற்றுமையு மல்வழியு மர்மெழுத்
ததிகார லக்கணமெலா
மறிந்து சொல்வதிலக்கணக்கவிதை யல்லாத
தவலக்கணக் கவிதையே (உ)

திணையின் மூன் றுய்ப்பாலி னைந்தா யிடத்திலே
திரியமூன் றுய்வழக்குச்
செய்யுளி—னிரண்டாய் வெளிப்படை குறிப்பிலே
சென்றிரண் டாய்நின்றசொ
லிணையியற் சொற்றிரி சொல்வட சொல்லென்றிவ்
விரண்டதாய்ப் பொருளின்மூன்று
பின்னமும் பெயர்வினைக ளிடையுரிக ளன்கா
றிவற்றினுட் பெயரொன்றுமே
துணைகொளிடு குறியாதி பொருளாதி நாலாறு
சொல்லாற் பொதுச் சிறப்பாகு
சொன்னவினை முற்றெச்ச மெதிர்மறை குறிப்புநாற்
றொகையாற் பொதுச்சிறப்பா
மனையு மிடையுரியும் பொதுச்சிறப் பாச்சொல்
லதிகார லக்கணமெலா
மறிந்து சொல்வதிலக் கணக்கவிதை யல்லாத
தவலக்கணக் கவிதையே (௩)

இவ்வகையி லிடுகுறிப் பெயர்மூன்று காரணத்
திட்டபெய ரெட்டாகுமே
யீராறு பொருளாதி யோராறு மரபுபெய
ரின்னமுந் திணைமுதற்பேர்
செவ்வனொரு பதுதிணை பாலிடப் பெயர்வினை
சிறப்பிலீ ரொன்பதுபொதுத்
திணைப்பெயர்கள் டன்னையிரு பத்தா றினிப்பொது
திணைவினைக ளெட்டிவற்றிற்
கைவையறு மீரெச்சம் வினைகளிரு மூன்றுமுக்
காலத்து முற்றுவினையுங்
கருதினமூ வொன்பது குறிப்புவினை முற்றுங்
கணக்கிலா ரென்பதென்றே
யவ்வகைப் பெயர்வினை யனைத்துந் தெரிக்குஞ்சொ
லதிகார லக்கணமெலா
மறிந்து சொல்வதிலக் கணக்கவிதை யல்லாத
தவலக்கணக் கவிதையே (ச)

எச்சவகை பத்தாந் தொகாநிலைக ளொன்பதா
மிறையோ டிசைந்தபொருள்கோ
ளேற்றவேற் றுமையிடைச் சொல்லின்வகை யும்மையோ
டிவ்வாறு மெவ்வெட்டதாம்
வைச்சவழு வேழுதொகை நிலைவினை வேகார
மன்னான்கு மவ்வாறதாம்
வந்ததிணை பால்வழு வமைத்தவிட மைந்தாகும்
வருதொகை பொருள்சிறப்பான்
மெச்சவரு மிடநாலு காலமூன் றின்றில்வந்து
வினைபெயர்க ளாயிடைச்சொல்
வினைவிட மிரண்டுரிச்சொல் வினைசொலாய் விளங்குமிட
மென்றிவை யெல்லா
முச்சமற வேசொல்ல லாமென விதிக்குஞ்சொ
லதிகார லக்கணமெலா
மறிந்து சொல்வதிலக் கணக்கவிதை யல்லாத
தவலக்கணக் கவிதையே (ரு)

உடன்பாடு முற்றுமெதிர் மறைமுற்று மேவன்முற்
றும்வியங் கோள்முற்றுமா
யொருநால தாகும்வினை முற்றெலா மறுபொருளு
முறுவினை வுஞ்சுட்டுமூ
விடம்பாவும் வேருதி களுமாக நாலதா
மெல்லாக் குறிப்புமுற்று
மிசைத்தபே ரெச்சமுங் காலமிலி காலமுள
வெதிர்மறை குறிப்பினென்கா

மடங்காத காலவினை யெச்ச(மறை வினை)யெச்ச
மறிகுறிப் புவினையெச்ச
மன்றிமுத லானதனி வினையெச்ச மென்றுநா
லாகும்வினை யெச்சமெல்லா
மடந்தாய் தொழிற்பெயரு முதனிலை விகாரவண்ண
மன்னுச்சா ரியைவிகுதிமு
வகைக்கால மாறுலு மாறுகு மென்பர்வினை
வகைசொல்ல வல்லோர்களே (௬)

ஏழ்திணை முதற்கரு வுரிப்பொரு ளிரண்டே
ழிரண்டைய் யிரண்டுகைகோ
ளிரண்டுகைக் கிளவீ ரிரண்டுகள விற்புணர்ப்
பீரிரண் டெண்ணிரண்டொன்
றாழுங் களவுதொகை விரியிலிரு நூற்றறுப
துடனெழு வரைவுதொகையா
றுள்ளவிரி யெழுபதோ டைந்துகற் பிற்புணர்ப்
போரிரண் டேழுதொகைமேல்
வாழுவரு கற்பில்விரி யென்பது பெருந்திணையில்
வந்தவிரி யீரேழுடன்
வைத்திடுங் கிளவிநா னூற்றுமுப் பத்தாறு
வாயில்பதி னேழோடீரா
றுழிய வகப்பாட் டுறுப்புவமு வந்தமு
வகப்பொரு ளிலக்கணமெலா
மறிந்து சொல்வதிலக் கணக்கவிதை யல்லாத
தவலக்கணக் கவிதையே (௭)

ஏய்ந்தவிரி வெட்சியினி லிருபது கரந்தையினி
லீரேழு வஞ்சிமூவே
ழியற்காஞ்சி யிருபத் திரண்டிருப தோடொன்ப
தெழிலுழிஞை நொச்சிவொன்பான்
பாய்ந்துபொரு தும்பையிரு பத்துநா லாகுமுப்
பத்துமூன் றும்வாகையிற்
பாடாணி லெண்ணாறு பொதுவின்முப் பத்தேழு
பத்தொன்ப தாங்கைக்கிளைக்
கோய்ந்திடு பெருந்திணையி லாறுதி வாறே
யுணர்த்துபன் னிருபடலமா
யுள்ளதிணை யுந்துறையு மொன்றுபட வேவிரித்
தோதில்வெண் பாமாலையென்
றுய்ந்திடு மிலக்கிய மடுக்கிய புறப்பொருளி
னதிகார லக்கணமெலா
மறிந்து சொல்வதிலக் கணக்கவிதை யல்லாத
தவலக்கணக் கவிதையே (௮)

ஈரிரு வகைச் செய்யுளுந் தொடர்நிலைக் கங்க
மெழுநான்கு மேகருணமு
மெவ்வகைச் செய்யுட்கு மிருநெறியு மற்றவைக
ளெய்தும் குணங்கள்பதப்
பேரிடும் பொருளணிகள் முப்பத்து நாலுவிரி
பெருகுமிரு நூற்றிரண்டும்
பின்னையெழு வகைமடக் கடிநான்கி லைம்மூன்று
பேதத்தி னூற்றஞ்சுமேற்
சேரவடி முழுதுமொரு சொலுமோ ரெழுத்துந்
திருப்பிய மடக்குமிருபான்
சித்திரமு மானசொல் லணிமுழுதும் வழுவுமலை
திரியவொன் பதுமாறுமென்
ருரிய மொழிந்தபடி தமிழால் மொழிந்திடு
மலங்கார லக்கணமெலா
மறிந்து சொல்வதிலக் கணக்கவிதை யல்லாத
தவலக்கணக் கவிதையே (௯)

இலக்கணதீபம் முற்றும்.

கையறவு.

கரந்தைத் தமிழ்ச் சங்க உறுப்பினரும், உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளி—புலவர்கல்லூரி மாணவியர்களுள் பொதுத் தேர்வில் முதல்வராக வெற்றிபெற்றவருக்கு ஐந்நூறுவெண்பொற்காசுகளைத் தம்பெயரால் பரிசு நிதி —— அமைத்தருளிய அம்மாபேட்டை, —— சி. வே. த. செங்கம்மாளாச்சி அவர்கள் 17—7—65-இல் இயற்கை எய்தியமைகேட்டுத் துயருறுகின்றோம். அவரைப் பிரிந்து வருந்தும் குடும்பத்தினர்களுக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொழிற்றொண்டர்.

"இலக்கியமும் கல்வெட்டும்"

(பேராசிரியர் தி. அடிகளாசிரியர்)

முன்னுரை.

மக்கள் ஒப்புமை அறிவு அவர்தம் நாகரிகத்தை வளர்த்து வருகிறது. புலவர் ஒப்புமை அறிவு அவர்தம் புலமையை மேலும் மேலும் வளர்க்கிறது. இலக்கியச் சுவையை நுகர்வோர் தாம் சுவைக்கும் இலக்கியத்துடன் வெவ்வேறு இலக்கியப் பகுதிகளை ஒப்பிட்டுக் கற்றுச் சுவைத்தால் அது அவர்க்குப் பேரின்பத்தை விளைக்கிறது. அவிச்சுவை விழையாமல் செவிச்சுவை விழையும் புலமையாளர்க்காகச் சில செய்திகளை ஒப்புமைப்படுத்தி இங்கே எழுதத் தொடங்குகிறேன்.

பதமும் தளையும்,

பரணி பாடுவதில் செயங்கொண்டார் மிகச் சிறந்தவர். அவர் முதற் குலோத்துங்க சோழனுடைய அவைக்களத்தில் தலைமைப் புலவராக விளங்கினர். அவர் அச்சோழன்மேல் கலிங் கத்துப் பரணி என்னும் இலக்கியத்தைப் பாடியுள்ளார். அது சொற்சுவை பொருட்சுவை நிறைந்த புறப்பொருள் இலக்கியமாகும். பல வரலாற்றுச் செய்திகளையும் அது நமக்குக் கூறுகிறது.

சோழன் ஆட்சியில் அடங்கியிருந்த குடிமக்களெல்லாம் இவன் கோல் செம்மையால் குற்றமே புரிவதில்லை. குற்றம் புரியாமை யினுல் அவர்களைக் காலில் தளையிட்டுத் தண்டிக்கவேண்டுதலும் இவனுக் கில்லையாயிற்று. அவரெல்லாம் இவனது நல்ல ஆட்சி யிலே எவ்வகையான இடுக்கணுமின்றி இன்புற்றிருந்தனர்.

ஆனுல், சோழன் ஆட்சிக்கு அடங்காத மன்னரோ இவனது ஆட்சியைக் கண்டு மிகவும் அழுக்காறு கொண்டனர். அதனுல் அவர் கதங்கொண்டு போர்க்கெழுந்தனர். நம் சோழன் அவர்தம் போரைக்கண்டு அஞ்சவில்லை. அவருடன் எதிர்த்துப் போரிட்டு அவரை உயிருடன் பற்றிக் காலில் (பதத்தில்) தளையிட்டுச் சிறை யில் வைத்துவிட்டான். அந்தோ பாவம்! அவர்தாமும் மெல்ல வந்து இவன் நல்லடி பொருந்தி இறைஞ்சியிருப்பாரேயானுல் அவரும் இன்பமாகவே வாழ்ந்திருப்பர்.

இந்நிகழ்ச்சியைச் சோழனுடைய அவைக்களப் புலவரெல்லாம் அறிந்தனர். அவர் இவனுடைய (மேற்குறிப்பிட்ட) வீரப் புகழை பாட்டிலே வைத்து பாடத் தொடங்கினர். சோழன் கதஞ்சிறந்த வணங்கா மன்னரை வணக்க அவரைச் சிறையில் வைத்து அவர்தம் பாதத்தில் (காலில்) தளையிட்டான். 'அந்நிகழ்ச்சியைப் பாடிய புலவரோ தம் பாட்டுள் சோழன் புகழை வைத்து, அப்பாட்டின் பதந்தோறும் (அடிதோறும்) உரிய தளையமையப் பாடினர் செயங்

கொண்டார். இந்நிகழ்ச்சிகளையெல்லாம் நேரிற் கண்டுணர்ந்தவ ராதலின் தாம் பாடிய பரணியுள் சோழன் ஆண்ட நாடு எப்படி யிருந்ததென்பதைக் கூறுமிடத்து மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் புலப்படுமாறு.

"கதங்க ளிற்பொருதி றைஞ்சி டாவரசர்
காலக ளிற்றளையும் நூல்களின்
பதங்க ளிற்றளையும் அன்றி வேறொருப
தங்க ளிற்றளைகள் இல்லையே." (274)

என்று பாடுகிறார்.

"சோழன் ஆட்சியில் பகைமன்னருடைய கால்களில் தளை யுண்டு; நூல்களிலே உள்ள செய்யுள்களின் பதங்களில் (அடிகளில்) தளையுண்டு. இவ்விரண்டு தளைகளன்றி வேறொரு பதங்களிலே தளையில்லை" என்பது மேற்கண்ட பாட்டின் கருத்தாகும். இவ் விரண்டு தளைகளில் ஒன்று சோழன் அமைத்தது; மற்றொன்று இவன் புலவர் அமைத்தது. முதல் தளை சோழனுடைய வீரத்தைப் புலப்படுத்துகிறது. இரண்டாவது தளை சோழனுடைய (புலவர் பாடும) புகழைப் புலப்படுத்துகிறது. இவ்விரண்டு தளைகளுள் முன்னது காரணமாயும் பின்னது அதனாலெழுந்த காரியமாயும் இருத்தலைக் கற்போர் நுணுகி உணரவேண்டும். இச்செய்யுள் செம் மொழிச் சிலேடைப் பாற்பட்ட நியமச் சிலேடையணியுடன் கூடி, கதம், பதம் என்கின்ற அடியெதுகையும் கால், நூல் என்னும் எதுகை விகற்பமும் பெற்று கற்போர்க்குப் பொருட்சுவையும சொற் சுவையும் தோன்றுமாறு பொலிகின்றது. நாம் இங்ஙனம் இலக்கியத் தில் படிக்குங் கருத்தினைக் கல்வெட்டுக்களிலும் காண்கிறோம். இரண்டாங் குலோத்துங்கனுடைய பலவகை மெய்க்கீர்த்திகளில் 'பூமன்னு பதுமம்' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியும ஒன் றாகும். அம்மெய்க்கீர்த்தியில்

'பாவும் பணைக்கைம் மாவு மல்லது
வன்றளைப்படுதல் கனவிலும் காண்டற் கரிதென',

என்று மேற்கண்ட பரணிச் செய்யுளில் கண்ட கருத்திற்கு ஒரு பகுதி வேறுபடக் கூறப்பட்டுள்ளது. சோழன் ஆட்சியில் பாக்களும் பணைக்கைமாவாகிய யானைகளுமே தளைபடுவன. வேறு எவரும் குற்றம் புரிந்து தளைபடுதலில்லை என்பது இதன் கருத்தாம்.

"அற்றாரைத் தேறுதல் ஓம்புக"

திருக்குறள் பொருட்பாலில் அரசன் அரசியல் அலுவற்கு அமைச்சர் முதலானவரை ஆராய்ந்து தெளிதலைக்கூறும் 'தெரிந்து தெளிதல்' என்னும் அதிகாரத்திலே

அற்றாரைத் தேறுதல் ஓம்புக; மற்றவர்
பற்றிலர் நாணார் பழி."

என்றொரு அருமைத் திருக்குறள் உள்ளது. அதற்கு உரை எழுதிய பரிமேலழகர் "சுற்றமில்லாதவரைத் தெளிதலை ஒழிக;

அவர் உலகத்தோடு தொடர்பிலர். ஆகலான் பழிக்கு அஞ்சார்" என்று உரைகூறியுள்ளனர்.

தஞ்சை இராசராசேச்சுரத்திலுள்ள இராசராசன் கல்வெட்டொன்று (தென்-உ-பகுதி-3 எண் 69) அக்கோயிலில் சில அலுவலாளர்களை ஏற்படுத்திய செய்தியைக் கூறுகின்றது.

"உடையார் ஸ்ரீ ராசராசதேவர் உடையார் ஸ்ரீ ராசராசீச்சுரம் உடையார்க்குச் சோழமண்டலத்துப், பாண்டியனுடான ராசராச மண்டலத்தும், தொண்டை நாடான சயங்கொண்ட சோழமண்டலத்தும் பிரம்ம தேயங்களிலாரே அவ்வவ் பிரம்ம தேயங்களில் பூமி சம்பத்தும், பந்து சம்பத்தும், அர்த்த சம்பத்தும் உடையராயிருப்பாரை, ஸ்ரீ பண்டாரம் செய்ய பிராம்மணரையும், திருப்பரிசாரம் செய்ய மாணிகளையும், கணக்கெழுத கரணத்தார்களையும் இடக்கடவார்களாக, உடையார் ஸ்ரீ ராசராசதேவர் திருவாய் மொழிந்தருள" என்பது அக்கல்வெட்டின பகுதியாகும்,

தஞ்சை இராசராசேச்சுரம் இராசராசன் காலத்தில் பொன்னாலும் நவமணிகளாலும் செய்த அருங்கலங்களையும், பொன் வெள்ளி முதலியவற்றாற் செய்த பரிகலங்களையும், ஏனைய பல பொருள்களையும் உடைய திருக்கோவிலாக இருந்ததனால், அக்கோவிலுள் அலுவல் பார்க்கும் பண்டாரிகளும், பரிசாரகரும், கணக்கரும் நிலமும், சுற்றமும், பொருளும் உடையவராக இருக்க வேண்டும் என்று இராசராசன் ஆணையிட்டான். இதனைக் கருதினால், மேற்கண்ட திருக்குறளில் "அற்றாரைத் தேறுதல் ஓம்புக" என்பதற்கு "நிலமும் சுற்றமும் பொருளும் இல்லாதவரை அரசியல் அலுவல் செய்வதற்குரியராகத்தேறுதலை ஓம்புக" என்று உரை கூறலாமன்றோ.

"வெண்ணு"

தஞ்சைக்கு வடபால் ஓடும் வெண்ணாற்றை யாவரும் அறிவர். அவ்வாற்றின் பெயர் விண்ணாறு என்றிருக்க வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். அப்படிக் கூறுவதற்கு வெறும் யூகம் அல்லாமல், தக்க சான்றுகளிருப்பின் அப்பெயரை ஏற்றுக் கொள்ளத் தடையில்லை. அது நிற்க; தொல்காப்பியம் எழுத்ததிகாரம் புள்ளி மயங்கியலில் பதினொன்றும் நூற்பா ணகரவீற்றுத் தொழிற்பெயர்க்குப் புணர்ச்சிவிதி கூற வந்ததாகும். இளம்பூரணர் என்னும் பழைய உரையாசிரியர் அந்நூற்பா உரையில் "எல்லாம், என்ற இலேசினால், தொழிற் பெயரல்லனவும் உகரமும், வல்லெழுத்தும் பெறுவன கொள்க. உதாரணம் வெண்ணுக்கரை, எண்ணும் பாறு, மண்ணுச் சோறு என வரும்" என்றனர்.

மேற்கண்ட உதாரணங்களில் 'வெண்ணுக்கரை" என்ற உதாரணம் வெண்ணாற்றினதுகரை என்று பொருள்பட்டு வெண்ணாற்றைக் குறிக்கலாம் என்று முதலில் நான் ஐயமாகக் கருதினேன், பின்னர் நான் பல கல்வெட்டுக்களைப் படித்து வரும்

வள்ளுவத்தில் ஆராய்ச்சிப் பொழிவுகள்

சாலை இளந்திரையன்.

தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த ஆராய்ச்சிகள் செய்வதற்காகத் தில்லித் தமிழ்ச் சங்கம் அமைத்த ஆராய்ச்சி அரங்கம், திருக்குறள் பற்றிய பத்து ஆராய்ச்சி உரைகளை நிகழ்த்தி, தனது 1964-65 நிகழ்ச்சிகளை 8—8—65-ல் முடித்துக்கொண்டது.

29—8—'65 முதல் இரண்டாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் ஆராய்ச்சி அரங்கம், 1964 நவம்பர் மாதத்தில் தொடங்கியது. 20-12—64 முதல் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை கூட்டங்கள் நடந்தன. "வள்ளுவ அரசியலின் அடிப்படைக் கோட்பாடுகள், வள்ளுவப் பெண்மை, திருக்குறள் அணிகள், வள்ளுவர் உள்ளம், இலக்கண வள்ளுவம், வள்ளுவர் உளநூற் புலமை, வரையறுத்த பொருளில் வள்ளுவச் சொல்லாட்சி, திருக்குறளில் கண்கள்" முதலிய பத்து ஆராய்ச்சி உரைகளை உறுப்பினர்கள் நிகழ்த்தினார்கள்.

இந்த ஆராய்ச்சிகளால் பல குறள்களின் பொருள்கள் புதிய விளக்கம் பெற்றன; வள்ளுவரின் அகண்ட பேரறிவின் மாட்சி புலப்பட்டது; வள்ளுவத்தை இன்னும் பலவிதங்களில் ஆராய்ந்து சுவைக்க இடம் உள்ளது என்னும் உண்மையும் வெளிப்பட்டது.

வள்ளுவ நூலின் ஆழ அகலங்களைத் தொட்டுக் காட்டி, தமிழ் இலக்கியங்களில் ஆராய்ச்சிக்கு உள்ள வழிதுறைகள் மிகப்பல என்பதைக் கோடிட்டுக் காட்டிய திருக்குறள் ஆய்வுக் கூட்டத் தொடரின் கடைசிக்கூட்டம் 8—8—65 மாலை 3 மணிக்குச் சங்கக் கட்டிடத்தில் நடைபெற்றது. திரு. பட்சிராசன் "திருக்குறளில் கண்கள்" என்னும் பொருள்பற்றி ஆய்வுரை நிகழ்த்தினர். கவிஞர்

(88-ம் பக்க தொடர்ச்சி)

பொழுது தஞ்சை மாவட்டம் பாவநாசம் வட்டத்திலுள்ள முன்னியூர் (முனியூர்) அகத்தீசுரர் கோவிற்கல்வெட்டைப் படித்தேன் (தென்-8-204) அதில், நிலம் ஒன்றிற்கு எல்லை கூறுமிடத்து, "வெண்ணுக்கு வடகரை; வெண்ணுக்குக் கிழக்கும் வடக்கும்" என்று வெண்ணாறு குறிப்பிடப்பட்டிருத்தலை அறிந்தேன். அதனால் "வெண்" என்னும் ணகரவீற்றுச் சொல் உகரம் பெற்று 'வெண்ணு' என்று உலகவழக்கில் வழங்கிற்று என்பது புலனாயிற்று. இக் காரணத்தினாலே வெண்ணுக்கரை என்ற எடுத்துக்காட்டை எடுத்துக் காட்டிய இளம்பூரணர் சோழநாட்டில் வாழ்ந்தவராயிருக்க வேண்டும் என்று நான் அடிக்கடி கருதுவதுண்டு.

சாலை இளந்திரையன் "திருக்குறள் ஓர் இன்ப நூல்" என்னும் தலைப்பில் அமைந்த தமது பாடல்கள் சிலவற்றை இசைத்தார்.

கண்களைப்பற்றித் திருவள்ளுவர் எங்கெங்கே என்னென்ன பேசுகிருர் என்பதை வகுத்தும் தொகுத்தும் விளக்கிய திரு பட்சி ராசன், அரசியலில் குறிப்புணரும் கண்களையும், இன்ப இயலில் குறிப்புணர்த்திக் குறிப்பறியும் கண்களையும் தொட்டுக் காட்டினுர்; 'கண்ணோட்டமுடைய கண்ணே அழகுடைய கண்' என்றும் கல்வி உடையவரே கண் உடையவர் என்றும் எடுத்துரைத்தார். காமத்துப்பாலில், காதலன் வந்தபோதும் அவன் வராதபோதும் துஞ்சாத கண்களையும், ஒரு தலைவனின் மார்பைப் பொதுவுண்ணுங் கண்களையும் சுட்டிக்காட்டினுர்; "காதலை உண்டாக்கி எனக்குத் துன்பஞ் செய்த இக் கண்கள் துன்பப்படவேண்டியது முற்றிலும் சரியே" என்று 'கும்மாளம்'போடும் காதலியையும், கண்ணுள் இருக்கும் காதலன் மறைந்துவிடுவானே என்று கண்ணுக்கு மை எழுதாது அமர்ந்திருக்கும் காதலியையும் அவர் எடுத்துரைத்தபோது, வள்ளுவக் கண்கள் பெற்ற பெருமையின் மணம் கேட்டோர் நெஞ்சமெங்கும் கமழ்ந்தது.

அடுத்து திரு சாலை இளந்திரையன், "திருக்குறள் ஓர் இன்ப நூல்" என்னும் தலைப்பில் அமைந்த ஆய்வைப் பாட்டிலேயே இசைத்தார். சுமார் இருபது பாடல்களில் அமைந்த அந்த ஆய்வின் சில பகுதிகள் வருமாறு:

இன்பத்தைச் சொல்வதிலே—அதிலே
ஈடினை வெல்வதிலே
என்தந்தை வள்ளுவம் போல்—ஒருநூல்
இன்னமும் தோன்றவில்லை.

❋

தோற்றவர் வென்றவராம்—அதிலே
தோன்றுதல் இன்பமதாம்.
ஏற்றிய இன்பநெறி—இதுபோல்
எங்ஙனும் கண்டதுண்டோ?

(வேறு)

தொட்டுவிட்டால் சுட்டுவிடும் தீயை அறிந்தார்க்கு
விட்டுவிட்டால் சுட்டுவிடும் காதலெனும் விந்தையினைத்
தொட்டு விளக்கித் துலக்கி அளித்தவன் நம்
பட்டுமனப் பாங்காளன் வள்ளுவனே அல்லவோ?

கண்டுகேட்டு உண்டுயிர்த்தே உற்றறியும் அம்புலனும்
ஒண்டொடியாள் கண்ணே உளவென்ற அச்செய்தி
ஆரறியார்?—ஆனாலும், அப்பெரிய இன்பத்தை
ஆருரைத்தார் வள்ளுவன்போல் அத்தனைச் சிக்கனமாய்?

(வேறு)

அன்பை எழுதி அடுக்கிவைத்தான்;—அரசு
ஆட்சி முறையும் வரைந்துவைத்தான்;-
இன்பம் எழுதப் புகுகையிலே—எழுத்
தாணியைத் தேனிலே தோய்த்துவிட்டான்.

❋

ஈற்றில் அமைந்தது காமத்துப்பால்—அஃது
எங்கணும் ஊறிய பாட்டினிமை
போற்றி வடித்து நிரப்பியதாம்—ஒரு
பொற்கிண்ணம் அல்லவே, கற்றவரே....

இவ்வாறு நெடுகச் சென்ற ஆய்வுப்பாட்டு, பன்முக இன்பங்கள் பொங்கி எழும்—ஒரு, பாத்தியே அல்லவோ வள்ளுவநூல்," என்ற விடை வினாவோடு முடிந்தது. வள்ளுவக் கண்களையும் வள்ளுவ இன்பத்தையும் அரங்க அறிஞர்கள் சுவைத்துப் பாராட்டி மகிழ்ந்தார்கள். இவ்வாறாக, வள்ளுவத்தைப் பற்றிய வகைமை நிறைந்த ஆராய்ச்சி, 'சாலை'யின் ஆய்வுப் பாட்டுடன் இனிதே நிறைவுற்றது.

எத்தனையோ அய்யப்பாடுகளோடு தொடங்கிய ஆராய்ச்சி அரங்கம் தொடர்ந்து சிறப்பாக இயங்கி, தன்னளவில் ஒரு நூலைப் பற்றிய பத்து ஆய்வுகளை நிகழ்த்தி முடித்தது தொடர்ந்த முயற்சிகளுக்குப் பெருக்கம் தருவதாக அமைந்தது. கூட்டுமுயற்சி ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பெரும்பயன் விளைக்கிறது என்பதை அரங்க உறுப்பினர்கள் மகிழ்வோடு நினைவுகூர்ந்தார்கள்.

1965-66ல் நடைபெறும் அரங்கக் கூட்டங்களில் சிலப்பதிகாரத்தைப் பல கோணங்களில் ஆராய்வது என்றும் அந்த ஆய்வுத்தொடர் 29-8-65ல் தொடங்கவேண்டும் என்றும் இக்கூட்டத்திலேயே முடிவு செய்யப்பட்டது.

கரந்தைத் தமிழ்ச்சங்கப் பேரன்பரும் தமிழ்ப் பேராசிரியருமான வி. உலகவூழியனார் அவர்கள் மறைவு குறித்த கையறுநிலை

1 ஏழிசைகூர் செந்தமிழை எட்டுத் திசைபரப்பும்
ஊழியத்திற் காஉதித்த நல்உலக—ஊழிய! நீ
செம்பொருளை நேரே தெரிந்தறிந்து கொள்வதற்கோ
உம்பருலக குற்றாய் உவந்து ?

2 செங்குருதி கண்பெருக்கத் தேம்புமொழி வாய்தெறிக்கப்
பொங்குதுயர்த் தீயுளத்திற் புக்கெரிய—இங்குறையும்
ஆன்றோர் இழைத்ததவ றென்னை அவர்ப்பிரிந்தாய் ?
சான்றோய்க்கீ தாமோ தகவு ?

3 தண்ணார் தமிழமிழ்தைத் தாங்கிப் பெருமுகில்போல்
பண்ணோ டளித்தநறும் பாவல்லோய் !—அண்ணா
மலைக்கழக மாணவர்க்கு வாழ்வளித்தாய் உள்ளம்
மலைப்புறஏன் சென்றாய் மறைந்து ?

4 பொய்யா மொழிப்பொருளைப் பூவழங்கு தேனாக
எய்யா தெடுத்தியம்பி இன்பளித்த—ஐயா ! நீ
பண்பொருந்து செந்தமிழ்சேர் பாவலர்கள் ஈங்கிருக்க
விண்பொருந்தி நிற்றல் வியப்பு !

5 செம்பொற் குடம்நிறைந்த தீம்பால் எனவிளங்கும்
கம்பன் கவியமுதைக் கார்மழைபோல்—இம்பருளம்
செம்மையுறத் தாம்பொழிந்து செய்யதமிழ் ஓங்குங்கால்
அம்மையிடம் செல்வதுவோ அன்பு ?

6 விண்ணணியங்கு கோளின் விறறிந்த நற்கணிவ !
மண்ணணியங்கு நோய்தீர் மருந்தறிவாய்—பண்ணணியங்கும்
முத்தமிழின் மொய்ம்பறிவாய் மூதறிஞர் நண்பறிவாய்
இத்தரைவிட் டேகியதேன் இன்று ?

7 அம்மதுரைச் சங்கத் தருட்கவிஞர் தம்வழியே
எம்முலக ஊழியனார் என்றேத்தும்—செம்மொழி
பாவால் எழிலுரையால் மைந்தமிழ்த் தொண்டாற்றிய நற்
கோவே,' நீஉற்றதெவண் கூறு

அன்பன்,
ச. பாலசுந்தரம்.

ஞாயிறு மாட்சி

திரு. தி. வேங்கடராமன் பி. ஏ., பி. டி. சேலம்.

விண்ணை வெளியாக்கி விந்தைசெய்யும் சோதி ஞாயிறு கீழ்த் திசையில் காலைப்பொழுதில் சுடர்மிகு வானத்தில் கேடில்சுடர் எழும் எழிலையும் வானநடுவில் மாட்சியுற விளங்கும் வெய்யோனின் மாண்பினையும், மாலையிலே மேற்றிசையில் இலங்குகின்ற மாணிக்கச் சுடரின் மாட்சியினையும் எல்லா நாடுகளிலும், எல்லாமொழிகளிலும் எல்லாக்காலங்களிலும் சொல்லேருழவர் பாடிச் சென்றுள்ளனர். ஆம்! தமிழ்ப்பாவலர் பலரும் நம்மொழியில் வல்லிருளைக் கவ்வுதற்கு வந்துதிக்கும் வெஞ்சுடரினையும், மண்ணைத் தெளிவாக்கும் விண் மணிமாலைப் பொழுதின்கண் மயங்கும் மாட்சியினையும் கண்டு சுவைத்து இயற்கையழகின் இணையற்ற ஓவியங்களைக் கவிதைத் தேனிலே வடித்தெடுத்துக் கொட்டியுள்ளார்கள். ஒளிவடிவாய்த் திகழும் அக்கதிரவன் மாட்சி செலவு தன்மை இவைகளை ஆய்ந்து கூறியுள்ள அவர்களின் பாடல்கள் இலக்கியங்களில் பரவிக்கிடக் கின்றன.

உலகின் தோற்றம் :—

கதிரவனை முதன்மையாகக்கொண்டு தோன்றியது இஞ்ஞாலம். அதாவது கதிரவனிடமிருந்து தெரித்து விழுந்த பிழம்பே இவ்வுலகம் ஆகவே உலகுக்கு முதன்மை சூரியன் இதனைப்பொய்யா மொழிப் புலவர் வாயுரை வாழ்த்தில்

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு' என்று கூறியுள்ளார்.

எழுத்துக்களுள் முதன்மை பெற்று விளங்குவது அகரம் அகரத்தினின்று எழுத்துக்கள் தோன்றின. அதுபோல உலகுக்கு முதன்மை சூரியன் அச்சூரியனிடமிருந்தே இவ்வுலகமும் பிறவும் தோன்றின என்று கூறுகின்றார்.

ஞாயிற்றின் முதன்மை :—

ஞாயிறு எல்லாக் கோள்களுக்கும் முதற்கண் வைக்கப்பட்டுள் ளது. ஞாயிறு முதலாக வைக்கப்பட்டமைக்குக் காரணம் யாது? ஞாயிற்றினிடமிருந்தே மற்ற கோள்கள் யாவும் ஒளிபெற்று மிளிர் கின்றன. ஞாயிறுதான் மற்ற கோள்களின் பிறப்பிடம் பிறகோள் கள் யாவும் ஞாயிற்றினைச் சுற்றி வலம் வருகின்றன. ஞாயிறு பிற கோள்களை வலம் வராத்தன்மையுடையது. ஞாயிற்றின் ஒளி கொள்ளும் பிறகோள்களெல்லாம் அதன் பிறப்பிடமாகிய ஞாயிறு தனைச் சுற்றி வலம்வர, அது நடுவே அசையாது விளங்கும் தன்மை யுடையதால் ஞாயிறு எல்லாக் கோள்களுக்கும் முதலாவதாக வைக்கப்பட்டுள்ளது.

தேயா மண்டிலம் :

(உலகு புரக்கும் ஞாயிறும் தண்கதிர் வீசும் திங்களும் வானத்தில் சுடர்விடும் இரு மண்டிலங்கள். அதனை ஞாயிற்று மண்டிலம் எனவும், கூறுவர். திங்கள் நாளும் நாளும் தேய்கின்றது. பின் நாளும் நாளும் வளர்கின்றது. கதிரவன் இங்ஙனம் தேய்வதில்லை. இதனால் கதிரவனைத் தேயா மண்டிலம் எனவும் திங்களைத் தேயும் மண்டிலம் எனவும் புலவர் பாடியுள்ளனர்.

'தேயா மண்டிலங் காணுமா றின்று' என்னும் பரிபாடலடி இதனைக் குறிக்கும்.)

உருப்பவிர் மண்டிலம் :-

கதிரவன் அனற்பிழம்பு வடிவத்தில் அமைந்துள்ளான். நன்கு காய்ச்சப் பெற்ற அனற்பிழம்பு நிலையில் ஞாயிறு உள்ளது எனப் பண்டைச் சான்றோர்

'நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் மண்டிலம் (அகம் 3)
'வானில் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம (அகம)
'சூடுறு பாண்டிலின சுருங்கிய கதிர்த்தாய் (பெருங்கதை)

என்ற பாடலடிகளில் தெளிவாகக் கூறிச் சென்றுள்ளனர்?

ஞாயிற்றுச் செலவு :—

ஞாயிற்றின் செலவு விரைவுடையது; ஓட்டமுடையது.

திண்நிலை மருப்பின் ஆடுதலை ஆக
விண்ஊர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய"

என்று நெடுநல் வாடை ஆசிரியர் திங்கள் மண்டிலத்தினும், ஞாயிற்று மண்டிலம் மிக்க செலவினை உடையது என நவில்கின்றார்.

'வெயில் கதிர் மழுங்கிய பார்கூர் ஞாயிறு, என்று மதுரைக் காஞ்சி வெயிலையுடைய சுடர்கற்றுளி மழுங்கிய செலவு மிக்க ஞாயிற்றினைக் குறிக்கின்றது.

மேலும் செஞ்ஞாயிற்றின் செலவும், அஞ்ஞாயிற்றின் இயக்கமும் இயக்கத்தான் சூழ்ந்த மண்டிலமும் என்றிவற்றை அவ்வவ்விடஞ் சென்று அளந்து அறிந்தவர் போல இஃதிஃது இப்படிப்பட்டது என உரைக்கும் அறிஞர்கள் பண்டு இருந்தனர் என்று சங்க இலக்கியம் கூறுகின்றது.

செஞ்ஞா யிற்றுச் செலவும்அஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்தமண் டிலமும
... ...
சென்றளந் தறிந்தோர் போல என்றும்
இனைத்து என்போரும் உளரே" (புறம்)

என்ற புறப்பாடலடிகளால் பண்டைத் தமிழர் வானநூலறிவு புலப்படும்.

ஞான்ற ஞாயிறு :

மேலவானில் மாலைப்பொழுதில் கதிரவன் விழுவது போலவும், கீழ்த்திசையில் காலைப்பொழுதில் மறுபடியும் எழுவது போலவும் காணும் காட்சியை நாம் நாளும் காண்கின்றோம். அதற்குக் காரணம் யாது அதற்குக்காரணம் மண்ணுலகத்தின் சுழற்சியே. ஞாயிறு என்றும் அசைவதில்லை. உண்மையில் சுழல்வது உலகமே இதனால் தான் ஞாயிறு விழுவது போலவும் எழுவது போலவும் தோன்றுகிறது. இதனை 'ஞான்ற ஞாயிறு" எனப் பண்டை இலக்கியம் பகரும். 'ஞான்ற ஞாயிறு' என்பதன் பொருள் ஞாயிறு விழுந்த பொழுதின்கண் என்பதாம்.

அவிர்சடை முனிவர்:

கதிரவன் ஒளிப்பிழம்பு வடிவானவன். வெம்மை வடிவானவன். கதிரவன் வெம்மையாவும் உலகம் வந்தடையின் உலகுயிர் யாவும் நசிந்துவிடும். ஆகவே அவ்வெம்மையை வானத்தில் அவிர்சடை முனிவர் சில்லோர் தாங்கிக்கொள்கின்றனர் என்று கூறுவர். இவர்கள் காற்றை உணவாகக் கொண்டு கதிரவனுடன் வருபவர்கள். இவர்களைப்பற்றி சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றது.

'விண்செலல் மரபின் ஐயர்' என்று திருமுருகாற்றுப் படையும் (107)

> 'சுடரொடு திரிதரு முனிவர்' என்று சிலப்பதிகாரமும்
> 'நிலமிசை வாழ்நர் அலமல் தீரத்
> தெறு கதிர்க் கனலி வெம்மை தாங்கி
> காலஉண வாகச் சுடரொடு கொட்கும்
> அவிர்சடை முனிவரும், என்று புறநானூறும்,

அவிர்சடை முனிவர்களைப் பற்றிப் பேசுகின்றன.

கண்கண்ட தெய்வம் ;

உலகுக்குக் கண்கண்ட தெய்வம் கதிரவன் ; கதிரவனைக் கடவுளாக வழிபட்டனர் பண்டைக் காலத் தமிழர்.

> 'கனைகதிர்க் கனலியைக் காமுறல்
> வளிதரும் செல்வனை வாழ்த்தவும்' என்ற கலித்

தொகை அடிகளால் சங்க காலத்தில் சூரியனை மக்கள் வழிபட்டனர் என அறியலாம். ஐவகை நிலங்களுள் ஒன்றான பாலை நிலத்திற்குச் சூரியன் தெய்வம் என்று கூறுவர்.

கதிரவன் கோட்டம் :

கதிர்வனுக்குக் கோயில் அமைத்து வழிபட்டனர் பண்டை மக்கள். காவிரிப்பூம்பட்டினத்தில் கதிரவன் கோட்டம் இருந்தது என்பதனை இளங்கோவடிகள் சிலம்பின் கண்

பகல்வாயில், உச்சிக் கிழான் கோட்டம்' என்று கூறுகின்றார்.

ஞாயிற்றின் பிறபெயர்கள்

ஞாயிற்றினை அழைக்கப் பல் பெயர்கள் தமிழ்நாட்டில் வழங்குகின்றன. அவைகள் பரிதி, பனிப்பகை, சுடர், இருள்வலி, எல், என்றூழ், அருணன், ஆதவன், ஆயிரஞ்சோதியுள்போன், செங்கதிரோன், ஒளி, சான்றோன் அனலி, அரி, கனலி, கதிரவன், பகலோன், வெய்யோன். பகல், சோதி, இனன், உதயன், எல்லை, ஏழ்பரியோன், வேந்தன் விண்மணி, இப்பெயர்களைக் கொண்டு பண்டைத்தமிழர் ஞாயிற்றினை எவ்வளவு தூரம் ஊன்றிக்கவனித்திருக்கின்றனர் என்பதனை அறியலாம்.

ஞாயிறு போற்றுதும்

நாளும் நாளும் வளர்ந்து பின் நாளும் நாளும் தேய்ந்து விளங்கும் திங்களையும், உயிர் அளிக்கும் ஞாயிற்றினையும் வியந்து போற்றுகின்றோம். உலகு புரக்கும் ஞாயிற்றினையும் தண்ணளி செய்யும் திங்களையும் வியந்து போற்றாத மக்கள் யார்? இளங்கோவடிகளும் சிலம்பின் கண்

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற் கோட்டு
மேருவலந் திரிதலான்"

என்று ஞாயிற்றினைப் போற்றுகின்றார்.

இதுகாறும் கூறியவற்றால் உலகின் தோற்றத்துக்கு முதன்மை ஞாயிறு என்பதும், ஞாயிறு எல்லாக் கோள்களுக்கும் முதலில் வைக்கப்பட்டமைக்குக் காரணம் என்ன என்பதும், ஞாயிறு தேயா மண்டிலம் எனப் பெயர் பெற்றமைக்குக் காரணம் யாது என்பதும், கதிரவன் தன்மை, எத்தன்மையது என்பதும், ஞாயிற்றின் கதிர்களைத் தாங்கி நிற்கும் அவிர்சடை முனிவர் யார் என்பதும், பண்டை மக்கள் ஞாயிற்றுக்குக் கோயில் அமைத்து வணங்கினார்கள் என்பதும், ஞாயிற்றை அவர்கள் எங்ஙனம் போற்றினர் என்பதும் ஒருவாறு சுருக்கமாக விளக்கப்பட்டன. இவற்றின் விரிவினைப் பல இலக்கியங்களில் கண்டு மகிழ்க.